# தமிழினம் எழுவதாகுக!

- கவி

வெளியீடு:

**பெரியார் பட்டறை**

**7/11 ஆ, அலிவலம் சாலை**

**சுந்தரவிளாகம், திருவாரூர்-610001**

**நூல் குறிப்பு**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தமிழினம் எழுவதாகுக |
| ஆசிரியர் | : | கவி (கு.விநாயகம்) |
| முதல் பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2019 (1988) |
| இரண்டாம் பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2027 (1996) |
| மூன்றாம் பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2044 (2013) |
| பக்கங்கள் | : | 6 + 102 |
| கணினி அச்சு | : | கவி, திருவாரூர் |
| வெளியீடு | : | பெரியார் பட்டறை, 7/11 ஆ, அலிவலம் சாலை, திருவாரூர், 610 001 |
| விலை | : | உருபா 30 |

## மூன்றாம் பதிப்பிற்கான என்னுரை

நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலை வணிகவியல் படிப்பில் 1987 இல் சேர்ந்த போது ஈழப் போர் ஒரு முடிவுக்கு வந்து இந்திய இலங்கை உடன்பாடு ஏற்பட்டது. 1983 இலிருந்தே இச்சிக்கல் தமிழகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்த போதும் நேரடியாக இந்தியா இச்சிக்கலில் தலையிட்டதால் தாக்கத்தின் வீச்சு அதிகமாகக் காணப்பட்டது. உடன்பாடு குறித்த பல்வேறு கருத்து மோதல்கள் ஏற்பட்ட நிலையில் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்திய இராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி ஈழத்தமிழர்களை காக்க வேண்டும் என்று தமிழர்கள் சார்பில் கோரிக்கை வைக்கப் பட்ட போது 'இந்திய அனுப்புவது முட்டாள்தனம்' என்று மறுத்த அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்களின் பேச்சை, இந்திய அமைதிப்படையால் ஈழத்தமிழர்கள் கடுமையாகப் பாதிக்கபட்ட போது, 'இந்திய இராணுவத்தை அனுப்பியது முட்டாள் தனம்' என்ற அவரின் பேச்சை அட்டையில் கைகளில் ஏந்தியபடி ஊர்வலமாக வந்தனர் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள்.

இதன் தொடர்ச்சியாக ஈழத்தில் நடைபெற்று வந்த நிகழ்வுகளை நேரடியாக கண்டறிவதற்காக ஈழம் சென்று வந்த வைகோ மற்றும் நெடுமாறன் ஆகியோர்களை வைத்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தனித்தனியே கூட்டங்கள் பட்டமளிப்பு விழா நடைபெறும் மண்டபத்தில் நடத்தப்பட்டன.

செப்டம்பர் 26, 1987 அன்று திலிபன் 12 நாட்கள் உண்ணாநிலை இருந்து இறந்த செய்தி வந்ததும், செப்டம்பர் 28 ஆம் நாள், பல்கலைக்கழகத்தில், என் வகுப்பில், துணைப் பேராசிரியரிடம் எடுத்துக்கூறி திலிபனை நினைவு கூரச் செய்தேன்.

நான் பயின்ற வகுப்புக்கு அருகில் அண்ணாமலைப் பல்கலைக் கழக மருத்துவ கல்லூரி இருந்தது. மருத்துவ கல்லூரி மாணவர்கள் எங்களைக் கடந்து செல்வார்கள். எனவே அவர்கள் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதற்காக, பிரபாகரன் படத்தை பெரிய அளவில் தாள்களில் வரைந்து, சில மேற்கோள்களையும் எழுதி, சுவற்றில் ஒவ்வொரு திங்கள் தோறும் ஒட்டி வந்தேன்.



ஈழத்தில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்து தமிழக நாளேடுகள், வார இதழ்கள் கொண்டிருந்த காழ்ப்புணர்வுகளைப் பதிவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஆங்கில இதழான 'ஃப்ரண்ட் லைன்', 'தி வீக்', 'இந்தியா டுடே' மற்றும் 'இந்து' நாளேடுகளில் உள்ள செய்தி களை மொழி பெயர்த்து தகவல்கள் சேகரித்து முதன் முதலாக என்னுடைய கையெழுத்தால் நூல் எழுதத் தொடங்கினேன். இது என்னுடைய முதல் நூல். நான் அண்ணாமலைப் பல்கலைகழகத்தில் முதுகலை இரண்டாம் ஆண்டு படித்து வந்தேன்.

தாள் வாங்குவதற்கு அப்போதைய நண்பர்கள் சீனிவாசன் போன்றவர்கள் பண உதவி செய்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழக நண்பர்களிடம் அந்த கையெழுத்துப்படி நூலைச் சுற்றுக்கு விட்டேன். அதன் மூலம் சில சிறந்த நண்பர்கள் கிடைத்தனர். அதில் குறிப்பிடத் தக்கவர் கோவில்பட்டியைச் சேர்ந்த பொன். அரவிந்தன்.

பின்பு இதை தட்டச்சு செய்வதற்காகவே தமிழ் தட்டச்சு பயின்றேன். அங்கும் இந்த நூலை, பயிற்சியின் போதே தட்டச்சு செய்வதற்கு அந்த தட்டச்சு நிறுவனத்தின் உரிமையாளர் அனுமதி கொடுத்தார். எனவே எனது தட்டச்சும் ஈழச்சிக்கலும் இணைந்தே இருந்தது. அந்நூலின் ஒரு படியை துக்ளக் இதழுக்கு அனுப்பி வைத்தேன். ஆனால் அவர்கள் அதை வெளியிடவில்லை.

வைகோ, நெடுமாறன் ஆகியோரை வைத்துக் கூட்டங்களை நடத்திய அண்ணாமலைப் பல்கலைக் கழக வேதியியல் துறைப் பேராசிரியரும், மனோன்மனீய சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தருமாகிய இரா. தி. சபாதிமோகன் அவர்களை அணுகி நூலுக்கு அணிந்துரை வேண்டினேன். அதற்கு அவர், வைகோ (அப்போது வை.கோபால்சாமி) அல்லது நெடுமாறன் அவர்களிடம் அனுப்பி அணிந்துரை வாங்கித் தருகிறேன் என்று கூறினார்கள்.

அப்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல்

படிப்பில் பயின்று கொண்டிருந்த செந்திலதிபனை (தற்போது மறுமலர்ச்சி தி.மு.க.வில் ஆட்சிமன்றக் குழு உறுப்பினராக உள்ளார்) இரா.தி. சபாபதிமோகன் அறிமுகம் செய்து வைத்தார்கள்.

நான்கைந்து மாதங்கள் ஓடின. திரு.வைகோ அவர்கள், ஈழம் சென்று வந்த பிறகு, அங்கிருந்த நிகழ்வுகளை எடுத்துக் கூற அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வந்திருந்தார். ஏற்பாடுகளை பேரா. இரா.தி.சபாதிமோகன் செய்திருந்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு வந்து பயணியர் விடுதியில் தங்கியிருந்த போது, என்னை அவரிடம் அறிமுகம் செய்து வைத்து, நான் எழுதிய நூலின் படியை வழங்கினார்கள்.

அதன் பிறகும் அந்த நூல் வெளியிடப்படவில்லை. எனவே நானே தட்டச்சு பயின்ற இடத்தில் நண்பர்கள் சூழ, வெளியிட்டேன். அப்போது அந்த நூலுக்கு 'சில நியாயங்கள் போராடுகின்றன' என்று பெயர் வைத்திருந்தேன். அப்போது என்னுடைய அகவை 22.

தொடர்ந்து இராசிவ் காந்தி கொலை, தடா சட்டம் போன்ற நிகழ்வுகள் நடைபெற்றதால் என்னுடைய முதல் குழந்தையை பெரிய அளவில் வெளியிட முடியவில்லை. நான் தட்டச்சு செய்யப்பட்ட படியை 'சைக்ளோஸ்டைல்' செய்து சென்னையில் 'துக்ளக்' சோ கலந்து கொண்ட ஒரு கூட்டத்திற்கு எடுத்துச் சென்றேன். அந்த கூட்டத்தில் நிறைய காவல்துறையினர் குவிக்கப்பட்டிருந்தனர். அங்கிருந்த சூழல் என்னை அச்சுறுத்துவதாக இருந்தது. எனவே அவற்றை அப்படியே எடுத்து வந்து விட்டேன்.

அதை வீட்டிற்கு கொண்டு சென்றால் வீட்டில் உள்ளவர்களுக்கு விடை சொல்லியாக வேண்டும். எனவே சிதம்பரம் பேருந்து நிலையத்திலேயே ஒரு கடையில் வைத்து விட்டு, திரும்பி வந்து வாங்கிக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன். இரண்டு நாட்கள் கழித்து மீண்டும் வேலையின் பொருட்டு சென்னைக்கு செல்லும் நிலையில், அந்த கடையில் கேட்டபோது அதை காண வில்லை என்று கூறியபோது எனது குழந்தையை அனாதையாக விட்ட நிலை எனக்கு ஏற்பட்டது. அதன் பின் 1996 இல் அந்த நூலை 'தமிழினம் எழுவதாகுக' என்ற தலைப்பில், மீண்டும் உயிர்ப்பித்து வெளியிட்டேன்.



2009 மே திங்கள் ஈழத்தில் நிகழ்ந்த இனப்படுகொலைக்குப் பிறகு நீருபூத்த நெருப்பாய் இருந்த தமிழக மாணவர்கள் எழுச்சிப் பெற்றுள்ள இந்நிலையில் இந்நூலை மீண்டும் மூன்றாம் பதிப்பாக வெளியிடுகின்றேன்.

இந்நூலில், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சித் தலைவர் திரு. வே. ஆனைமுத்து அவர்கள் 'ஈழப்போராட்டத்தில் பார்ப்பனர்களின் துரோகம்' என்னும் தலைப்பில் கட்டுரை போட்டி வைத்திருந்தார்கள். அப்போட்டிக்கு நான் எழுதிய கட்டுரையை இணைத்துள்ளேன்.

முந்தைய பதிப்பில் இல்லாத சில சான்றாவணங்களை இதில் இணைத்துள்ளேன்.

நூலைப் படித்து ஈழத் தமிழர்களின் வரலாற்றை உணருங்கள்.

**கவி (க.விநாயகம்)**
ஆசிரியர், பெரியார் பார்வை,
7/11, ஆ, அலிவலம் சாலை,
சுந்தரவிளாகம், திருவாரூர் 610 001.

**சிங்கள மக்களின் குணங்கள்**

போர்த்துக்கீசியர் கி.பி. 505–இல் இலங்கையில் அடி யெடுத்து வைத்தனர். ஆனால் தமிழர் வாழும் பகுதியை ஆளும் வாய்ப்பு கி.பி. 1619–இல்தான் அவர்களுக்குக் கிடைத்தது. அப்போது தமிழ்ப்பகுதியை ஆண்ட தமிழ் மன்னன் சங்கிலி மன்னன் போர்த்துக்கீசியருடன் ஏற்பட்ட சண்டையில் சிறைப் பிடிக்கப் பட்டான்.

இவர்களைத் தொடர்ந்து டச்சுக்காரர்கள் இலங்கையில் தமது ஆட்சியை அமைக்க 1638–இல், ஏற்கனவே தாங்கள் வாழ்ந்து வந்த மட்டக்கிளப்புத்துறையைக் கைப்பற்றி தங்களை நிலைப்படுத்திக் கொண்டனர். போர்த்துக்கீசியர்களின் ஆட்சியிலிருந்து விடுபட எண்ணிய சிங்களர், போர்த்துக்கீசியர்கள் மீது டச்சுக்காரர்கள் தொடர்ந்த போரில் டச்சுக்காரர்களுக்கு ஆதரவு தந்தனர். இதனால் போர்த்துக்கீசியர்கள் தங்கள் ஆட்சியை இழக்க நேர்ந்தது.

பின்னர் டச்சுக்காரர்களின் பிடியிலிருந்து விடுபட, ஆங்கி லேயருக்கு ஆதரவு அளித்தனர். அதன் விளைவாக 1815–இல் முழு இலங்கையும் ஆங்கிலேயர் வசமானது.

இவ்வாறு தங்களுக்கு இக்கட்டான நிலை ஏற்பட்ட போதெல்லாம் சிங்கள இன மக்கள் அந்நியரிடம் அடைக்கலம் புகுந்தனர் என்பது தெளிவு.

இலங்கை 1948 ஆம் ஆண்டு விடுதலை அடைந்த போது ஈழத் தமிழர்கள் சிக்கலில் மாட்டினர். சிங்களவர்களின் முதல் இலக்கு இந்தியாவிலிருந்து போய் இலங்கையில் குடியேறிய, இலங்கையின் பொருளாதாரத்தை தூக்கிப் பிடிக்கும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களான மலையகத் தமிழர்கள். இவர்களுடைய குடியுரிமை 1948–இல் ஒரு சட்டம் மூலம் பறிக்கப்பட்டது. சென்னை சட்டமன்றம் 'மனித உரிமைகள் மீறல்' என இச்சட்டத்தை



வர்ணித்து, 12.05.1952–இல் கண்டனத்தீர்மானம் நிறைவேற்றியது. 1952 தேர்தலுக்கு முன் இவர்களின் வாக்குரிமையும் பறிக்கப் பட்டது. 1964–இல் சிரிமாவோ பண்டாரநாயகா–சாஸ்திரி உடன்பாட்டின் மூலம் 10 இலட்சம் இந்திய மலையகத் தமிழர்களின் குடியுரிமைப் பறிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாக உடைந்து 1951–இல் 'இலங்கை சுதந்திர கட்சி'யை உருவாக்கிய பண்டாரநாயகா, தேர்தலில் வெற்றி பெற்று, 1956 ஆம் ஆண்டு 'சிங்களமே ஆட்சி மொழி' என்று அறிவித்தார். தேர்தலில் வெற்றிப் பெற்றவுடன் அதை நடை முறைப்படுத்தவும் முனைந்தார். இதற்கு தமிழர்களிடையே எதிர்ப்பு ஏற்படவும், தமிழர் தலைவர் தந்தை செல்வாவுடன் உடன்பாடு செய்து கொண்டார். 1957–இல் ஏற்பட்ட இந்த உடன் பாட்டில் சிங்களத்துக்கு இணையாக தமிழ் மொழி அங்கீகரிக்கப் பட்டது. வடக்கு கிழக்கு மகாணங்கள் வாக்கெடுப்பு நடத்தப்படாமல் இணைக்க வழிவகை செய்யப்பட்டது. அப்போது தந்தை செல்வா தலைமையிலான ஃபெடரல் கட்சி, திரிகோணமலையில் ஒரு மாநாட்டை நடத்தியது. வடக்கு கிழக்கு மகாணங்களுக்கு தன்னாட்சி அளிக்கக் கோரியும் தமிழ் மொழிக்கு உரிய இடத்தை வழங்கக் கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு முன்னோடியாக திரிகோணமலை மாநாட்டு இடத்தை நோக்கிப் பிரச்சார நடைப்பயணம் ஒன்று நடத்தப்பட்டது. இதைப் போலவே, இலங்கை ஐக்கிய கட்சியின் துணைத்தலைவராக இருந்த ஜெ.ஆர். செயவர்த்தனே 1957 இல் பண்டாரநாயகா–செல்வா உடன் பாட்டை எதிர்த்து கொழும்பிலிருந்து கண்டியை நோக்கி நடைப் பயணம் மேற்கொண்டார். கண்டியை அடைவதற்கு முன்பே, கம்பஹா என்ற இடத்தில் நடைபயணம் தடுத்து நிறுத்தப்பட்டது. இந்த நடைப்பயணத்திற்கு புத்த சாமியார்களின் ஆதரவு பெருமளவு இருந்தது.

இடையில், சிங்கள அரசு, போக்குவரத்துத் துறைப் பதிவாளர் மூலம் மோட்டார் வாகனங்களில் எழுத்துப் பலகையில் பதிவு எண்களுக்கு முன்பு 'SRI' என்ற ஆங்கிலச் சொல்லை போடுவதற்கு ஆணைப் பிறப்பித்தது. இதை எதிர்த்து தமிழர்களின் ஃபெடரல் கட்சி போராட்டம் நடத்தியது. இதையே காரணமாகக் கொண்டு பண்டார நாயகா–தந்தை செல்வா 1957 உடன்பாடு பண்டார நாயகாவினால் கிழித்தெறியப்பட்டது. பின்பு புத்த சாமியார் ஒருவனால் பண்டார நாயகா சுட்டுக் கொல்லப்பட்ட போது, அவரது மனைவி சிரிமாவோ பண்டாரநாயகா பிரதமரானார். இவர் 1960 தேர்தலில் தந்தை செல்வாவின் உதவியை நாடினார். தனது கணவருடன் செய்து கொண்ட 1957 உடன்பாட்டை நிறைவேற்றுவதாக உறுதிகூறினார். ஆனால் தேர்தலில் தனிப்பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றவுடன் உறுதிமொழியை அலட்சியப்படுத்தினார்.

1965 தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழர்களின் ஃபெடரல் கட்சியும் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது. இக் கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றது. ஃபெடரல் கட்சியின் சார்பில் திருச்செல்வம், அமிர்தலிங்கம் மற்றும் ஒருவர் என மூன்று பேர் அமைச்சரவையில் பங்கேற்றனர். இதனைத் தொடர்ந்து டட்லி சேனநாயகா–தந்தை செல்வா உடன்பாடு ஏற்பட்டது. இக்கூட்டணி ஆட்சிக் காலம் முழுவதும் தொடர்ந்த போதும் இவ் உடன்பாடு நிறைவேற்றப்படவில்லை.

அரசு அலுவலர்கள் சிங்கள மொழியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும். அதுவரை சிங்களம் தெரியாதவர்களுக்கு வருட ஊதிய உயர்வு நிறுத்தி வைக்கப்படும் என ஆணையிடப்பட்டது. இதை எதிர்த்து **செல்லையா கோட்டிஸ்வரன்** என்ற தொழிலாளர் துறை எழுத்தர், அரசு மீது வழக்கு தொடர்ந்தார். 'சிங்களம் கட்டாயம் கற்க வேண்டும் என்ற 1956 சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி' என்ற சட்டம், அரசிய லமைப்பு சட்டத்தின் 29 வது விதிக்குப் புறம்பானது



என வாதிட்டார். இதன்பின்பு கோட்டிஸ்வரன் பிரைவி கவுன்சிலில் மேல்முறையீடு செய்தார். இதற்கிடையில் பிரைவி கவுன்சிலிடம் மேல் முறையீட்டிற்கு செல்லும் அதிகாரத்தை ரத்து செய்வதற்காக 1971 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1972– இல் சுதந்திர இலங்கையின் புதிய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது. கோட்டிஸ்வரன் வழக்கு தோல்வியடைந்தாலும் ஒரு விழிப்புணர்வை ஈழத்தமிழர் களிடையே ஏற்படுத்தியது.

அரசுத் துறைக்குப் புதிய பதவிகளுக்கு ஆட்கள் தேர்வு செய்யும் போது சிங்களம் தெரிந்திருத்தல் அவசியம் என்ற விதி ஏற்படுத்தப் பட்டது. எனவே தமிழர்கள் அரசுப் பணியில் சேர்வது தடுக்கப் பட்டது. தற்போது பணியில் இருக்கும் தமிழர்கள் சிங்கள மொழியை ஒரு குறிப்பிட்டக் காலத்திற்குள் கற்று தேர்வில் வெற்றிப் பெற வேண்டும் என ஆணையிடப்பட்டது. இதற்கு ஃபெடரல் கட்சியும் துணைபோனது வெட்கக்கேடானது. இந்த ஆணையை எதிர்த்து பத்மநாபன், சுரேந்திர நாதன் மற்றும் குலமணி ஆகிய மூன்று இளைஞர்கள் வழக்குத் தொடுத்தனர். இதனால் அரசுப்பணியிலிருந்து நீக்கப்பட்டனர். இவர்கள்தான் சிங்களமே ஆட்சி மொழி என்ற சட்டத்திற்கு முதல் களப்பலியானவர்கள்.

ஃபெடரல் கட்சியின் துரோகத்தனத்தைக் கண்டு பத்மநாபன் அதிர்ச்சி அடைந்தார். இவர் 1982–இல் இறந்தார். தனது உயிரைப் பலி கொடுத்த முதல் தமிழர் இவர்தான்.

இதைத் தொடர்ந்து காங்கேசன்துறை இடைத் தேர்தலில் தந்தை செல்வா **தனி தமிழ் ஈழக்** கோரிக்கை முன் வைத்துப் பிரச்சாரம் செய்தார். அந்தத் தேர்தலில் அவருக்கு மிகப்பெரிய வெற்றிக் கிடைத்தது. இதன் பின் பாராளுமன்றத்தில் 19.11.76–இல், தந்தை

செல்வா அவர்கள்,

'ஒரு காலத்தில் தமிழர்கள் புத்திசாலித்தனமாக, விவேகமுள்ளவர்களாக, தனி அரசுடனேயே வாழ்ந்து வந்தனர். இலங்கையின் வரலாற்றில் தமிழருக்கு உரிய இடம் இருந்தது. நமது இயக்கம் உண்மையில் ஒரு தேசத்தைத் துண்டாடும் இயக்கம் என்று கருத நியாயம் இல்லை. தமிழ் ஈழம் ஏற்பட வேண்டும் என்பது இழந்ததை மீட்கும் இயக்கமாகும். இப்போது (1976 இல்) நமது இயக்கமானது தமிழர்களுக்கு ஒரு தனி ராஜ்யம் வேண்டும் என்ற குறிக் கோளுடன் நடப்பதாகும். ஆனால் நாம் சிங்கள மக்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டாலொழிய நாம் அழிந்து விடுவோம் என்பது நிச்சயம். ஆகையால் நாம் முயற்சி எடுத்து இந்தப் பிரிவினையை அடைந்தேயாக வேண்டும். சமஸ்டி அரசு ஏற்பட வேண்டும் என்ற கோரிக்கையை கை கழுவி விட்டோம்' என்று உரையாற்றினார்.

இதன் பின் 1976 இல் மே மாதம் 14 ஆம் நாள் வட்டுக் கோட்டையில் நடைபெற்ற மாநாட்டில் தமிழீழக் குடியரசு அமைக்கவும் அதில் வடக்கு, கிழக்கு மகாணங்களும் புத்தளம் மாவட்டமும் இருக்கும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இது **'வட்டுக்கோட்டை தீர்மானம்'** என்று வரலாற்றுச் சிறப்புப் பெற்றது.

ஃபெடரல் கட்சி, 'தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1977 தேர்தல் நடப்பதற்கு முன் தந்தை செல்வா மறைந்தார். அமிர்தலிங்கம் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணிக்குத் தலைவரானார். வட்டுக் கோட்டைத் தீர்மானத்தை முன் வைத்து 1977 தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் போட்டியிட்டது. தேர்தலில் அமோக வெற்றிப் பெற்று



வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றது.

1983–இல் மிகப் பெரிய இனப் படுகொலை சிங்கள அரசால் நடத்தப்பட்டது. குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை உட்பட 100–கும் மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1984–85 இல் இந்திய அரசு தலையிட்டு அமைதிப் பேச்சுக்கான வழியை ஏற்படுத்தியது. இந்தக் காலக் கட்டங்களில் ஆயுதங்களை ஏந்திப் போராடிய விடுதலைப்புலிகள், ஈராஸ், டெலோ, இ.பி.ஆர்.எல்.எஃப் மற்றும் பிளாட் அமைப்புகள் வளர்ந்து வந்தன. எனவே அக்குழுக்களும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுத்தப்பட்டனர். இரமேசு பண்டாரியின் அடாவடிப் போக்கினால் திம்பு பேச்சு வார்த்தை தோல்வியில் முடிவ டைகிறது. பாலசிங்கம், சந்திரஹாசன் மற்றும் சத்தியேந்திரன் போன்றோர் நாடு கடத்தப்பட்ட நாடகமும் நடந்தேறியது.

இலங்கை இனப்பிரச்சனையில் இந்தியா தலையிட வேண்டிய நிலை ஏற்பட்ட போது, தன் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள தன் நட்பு நாடுகளுக்கு தூது அனுப்பினர் அப்போதைய இலங்கை அதிபர் சே.ஆர். செயவர்த்தனே. அந்நட்பு நாடுகள் மறுத்து விட்டதாலும் போராளிகளின் போராட்டம் இறுதிக் கட்டத்தை நெருங்கி விட்டதாலும் இந்தியாவிடம் அடைக்கலம் புகுந்தார் செயவர்த்தனே. இந்தியாவும் இரண்டு கரம் நீட்டி வரவேற்றது. இந்திய இலங்கை உடன்பாடு ஏற்பட்டது. இந்த உடன்பாடு ஏற்பட்ட காலநிலை மற்றும் சூழ்நிலையை விரிவாக ஆராய வேண்டும்.

**இலங்கை இந்திய உடன்பாடு ஏற்பட்ட பின்னணி;**

இந்தியாவின் அப்போதைய பிரதமர் இராஜிவிற்கு, திரு வி.பி.சிங் அவர்களால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை சமாளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனவே இலங்கையில் ஏற்பட்ட போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விமானங்கள் மூலம் உணவுப் பொட்டலங்கள் வழங்கி மக்களின் கவனத்தைத் திசை திருப்பினார்.

விடுதலைப் புலிகளால் இலங்கை இராணுவத்துக்கு ஏற்பட்ட நெருக்கடியைத் தீர்க்க வேண்டிய கட்டாயத்தில் இருந்தார் அதிபர் செயவர்த்தனே. இலங்கை அதிபரை இலங்கைக்கான இந்திய தூதர் தீட்சித் சந்தித்தார். ஒரு மாத கால இடைவெளியில் இந்திய இலங்கை உடன்பாடு ஏற்பட்டது.

**இலங்கை இந்திய உடன்பாடு**

இலங்கை இந்திய உடன்பாட்டிற்கு விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஆதரவைப் பெறுவதற்காக, இந்திய விமானப்படை விமானத்தில் பிரபாகரன் அழைத்து வரப்பட்டார். இலங்கை இந்திய உடன்பாட்டின் விவரங்கள் தெரிவிக்கப்பட்டன. உடன்பாடு குறித்த சந்தேகங்களை அப்போதயை தமிழக முதல்வர் திரு. எம்.ஜி. இராமச்சந்திரனிடமும் தமிழக அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனிடமும் எடுத்துரைத்தார் பிரபாகரன். இதற்கு இறுதி முடிவு காண இராஜிவைச் சந்திப்பது என்ற தனது முடிவைக் கடுமையாக்கினார். இதனால் 28.7.1987 அன்று நள்ளிரவில் பிரதமர் இராஜீவ் பிரபாகரனைச் சந்திக்கிறார். உடன்பாடு பற்றிய தனது அய்யப்பாடுகளை எழுப்பிய பிரபாகரன், சில உறுதி மொழிகளை பிரதமரிடமிருந்து எதிர்பார்க்கிறார். பிரதமர் உறுதியளித்தவுடன் தனது முடிவை சகாக்களுடன் கலந்து ஆலோசித்த பின்னர் அறிவிப்பதாக பிரபாகரன் கூறுகிறார். எனினும் டில்லியில் அசோக் ஓட்டலில் பலத்த காவலுக்கிடையே பிரபாகரன் வைக்கப் படுகிறார்.

ஜுலை 29 ஆம் தேதி 1987–இல் பிரதமர் இராஜீவ் இலங்கை சென்று அதிபர் செயவர்த்தனவுடன் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்கிறார். மேலும் இராஜீவைக் கொல்ல சதியும் நடைபெறுகிறது. பின்னாளில் இலங்கை அதிபராக பதவியேற்ற மறைந்த பிரேமதாசா அவர்கள் இந்த உடன் பாட்டை எதிர்க்கின்றார். பிரதமர் இராஜீவ் இந்தியா வந்தவுடன் பிரபாகரன் இந்திய



விமானத்தில் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்படுகிறார். தனது சகாக்களுடன் கலந்த பின்னர் ஆகஸ்ட் 4, 1987 அன்று சூதுமேடு அம்மன் கோவில் திடலில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த உரையில், தமது இயக்கத்தின் கருத்துக்களைத் தெளிவாக முன் வைக்கின்றார். அதில், இந்த உடன்பாடு இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை பெற்று தராதபோதும், இந்தியா இதில் தலையிட்டு இருப்பதாலும், ஓர் இந்திய வீரனுக்கு எதிராக எமது துப்பாக்கியைத் தூக்க விரும் பாததாலும் அவ்வுடன்பாட்டை செயல்படுத்துவதற்கு ஒத்துழைப் பதாக கூறினார்.

இதனிடையே அதிபர் செயவர்த்தனே விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்தவுடன் பிரபாகரனின் துப்பாக்கியை தனது கட்சி அலுவலகத்தில் தொங்கவிடப் போவதாகக் கர்ஜிக் கிறார். இதிலும் அவர் தோல்வியைச் சந்திக்கிறார்.

அரசியல் பிரிவுத் தலைவர் யோகியின் மூலம் ஆயுதங்களை ஒப்படைப்பு செய்வதைத் தொடங்குகிறார் பிரபாகரன். மேலும் விடுதலைப்புலிகள் சரணடைய வேண்டும் என்ற அவரது எதிர் பார்ப்பை, அரசியல் ரீதியாக மட்டுமே நாங்கள் சரணடைகின் றோம், இராணுவ ரீதியாக அல்ல என்பதை யோகியின் நடவடிக்கை யின் மூலம் நிருபித்து, செயவர்த்தனேயின் கனவை தவிடு பொடியாக்கினார்.

உரிமைகள் கோரி பாதிக்கப்பட்ட மக்கள் போராடுவது இயற்கை. அதில் அரசியல் ரீதியாக ஒரு தீர்வு ஏற்பட வேண்டு மெனில், பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்று கின்ற வகையில் உடன்பாடு ஏற்பட வேண்டும்.

மேலும் ஆயுதங்களை ஒப்படைப்பது என்பது விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை, ஈழத்தமிழர்களைப் பொறுத்த வரை ஒரு மிக முகாமையான நிகழ்ச்சி ஆகும். கடந்த நாற்பது

ஆண்டுகளில் இனப் பிரச்சனை தீர்வுக்கு உடன்பாடுகள் ஏற்பட்ட போது ஆயுதங்கள் ஒப்படைப்பு என்ற நிலை ஏற்பட வில்லை. இதில் கால தாமதம் ஏற்படுவது இயற்கை. இதற்கு (அதாவது ஆயுதங்கள் ஒப்படைப்பதற்கு) புலிகள் உடன்பட்டதே அவர்களின் நல்லெண் ணத்தின் வெளிப்பாடாகும். மேலும் இவ்வுடன்பாட்டிற்கு விடுதலைப் புலிகள் எந்த விதத்திலும் கட்டுப்படாதவர்கள். எனவே அவர்களிடம் உடன்பாட்டில் உள்ள நிபந்தனைகளை நிறைவேற்று வதில் துல்லியத் தன்மையை எதிர்பார்க்க முடியாது. எனவே தான் இலங்கைக்கான இந்திய தூதருக்கும் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையே ஆயுதங்கள் ஒப்படைப்புக் குறித்து திரைமறைவு உடன்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது பின்னாளில் வெளிவந்தது. மேலும் ஆயுத ஒப்படைப்பு நடைபெறும் சமயத்தில் அதிகாரப்பகிர்வு மற்றும் நிர்மானப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், உடன்பாட்டின்படி ஆகஸ்ட் 15, 1987–இக்குள் நெருக்கடி நிலையை இவ்வுடன்பாட்டில் கையொப்பமிட்டுள்ள இலங்கை அரசு நீக்கியிருக்க வேண்டும். ஆனால் இலங்கை அரசு அவ்வாறு செய்ய வில்லை. பத்திரிக்கைகளின் மீது தணிக்கை அமுல் செய்யப் படுகின்றது. இதற்கு காரணமாக ஆயுத ஒப்படைப்பில் ஏற்பட்ட கால தாமதத்தை இலங்கை அரசு கூறியது. மேலும் புலிகள் உடன்பாடு ஏற்பட்ட 48 மணி நேரத்திற்குள் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்பதை ஏற்று உடனடியாக நிறைவேற்றுகின்றனர்.

இந்த உடன்பாட்டின்படி இது ஏற்பட்ட ஆறு வாரங்களுக்குள் எஞ்சியுள்ள இதர விஷயங்களில் தீர்வு காணப்பட வேண்டும். இந்திய இலங்கை அரசுகளால் இதுவும் நிறை வேற்றப்படவில்லை. இம்மாதிரியான விஷயங்களில் இருதரப்பு நம்பிக்கையைக் கருவி யாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

அடுத்து இடைக்கால நிர்வாக சபைக்குரிய அதிகாரங்கள் பற்றி



இந்திய இலங்கை அதிகாரிகளுடைய பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகளும் இந்திய அரசு அதிகாரி களும் பேச்சு வார்த்தை நடத்தினர். அதுவும் தோல்வியடைந்தது.

இதில் வேதனையான வேடிக்கை என்னவெனில், இவற்றை பற்றி யெல்லாம் முடிவெடுக்காமல் இந்திய–இலங்கை அரசுகள் உடன்பாடு ஏற்படுத்தியதுதான்.

விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் திலிபன், திரிகோணமலையில் சிங்களர் குடியேற்றத்தைத் தடுத்தல், இடைக்கால அரசு அமைவதற்கு முன், காவல் நிலையங்கள் அமைப்பதை திரும்பப் பெற வலியுறுத்தல், ஊர்க்காவல் படையைக் கலைத்தல் உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கைகளை முன் வைத்து சாகும் வரை உண்ணாநிலை மேற்கொண்டார்.

இந்திய இலங்கை அரசுகள் இந்த அறவழிப்போராட்டத்தை அலட்சியப்படுத்தின. மேலும் விடுதலைப்புலிகளின் தன்மானத்தை இந்தியா தூண்டிவிட்டது. விடுதலைப்புலிகளும் பிடிவாதமாக இருக்கவே, திலிபனின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்தது. இந்நிலையில் இலங்கைக் கான இந்திய தூதர் நிருபம் சென் யாழ்ப்பாணம் விரைகிறார். விடுதலைப்புலிகள் தங்களுடைய ஐந்து அம்ச கோரிக்கையை அவரிடம் அளிக்கின்றனர். திலிபனின் உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் தீட்சித் பிரபாகரனைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சு வார்த்தையில் வெற்றி பெற்ற தீட்சித்தால் திலிபனின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. செப்டம்பர் 26, 1987 இல் திலிபன் தன்னுயிரை ஈழத் தமிழர்களுக்காக ஈந்தார்.

இலங்கை மற்றும் இந்திய அரசுகள் பிரபாகரனிடம் பேச்சு வார்த்தையை ஒரு வாரத்திற்கு முன்பாக தொடங்கியிருந்தால் திலிபன் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கும்.

உடன்பாட்டில் இருந்த 'இடைக்கால நிர்வாகக் கவுன்சில்' என்பது 'இடைக்கால ஆலோசனைக் கவுன்சி'லாக மாற்றம் செய்யப்பட்டது. இருந்தும் முதல்வர் பதவிக்குப் பரிந்துரை செய்யும் போது மூன்று பெயர்களைப் பரிந்துரை செய்ய வேண்டும்.

இதில் இரண்டு பெயர் சம்பிரதாயத்திற்காகச் சேர்க்கப் படுகின்றன. பிரபாகரன் பரிந்துரை செய்த மூவரில் வடக்கு மகாணத்தைச் சேர்ந்த திரு. சிவஞானம் என்பவர் சிங்கள அரசால் தேர்வு செய்யப்பட்டதுடன் அல்லாமல், கிழக்கு மகாணத்தைச் சேர்ந்த இருவர் சிங்கள சூழ்ச்சியினால் விலக்கப்படுகிறனர். இதன் மூலம் கிழக்கு மகாண மக்களிடமிருந்து பிரபாகரனைப் பிரிக்கச் சூழ்ச்சிகள் இலங்கை அரசினால் செய்யப்பட்டன. இதுபோலவே, இடைக்கால ஆலோசனைக் கவுன்சில் உறுப்பினர்களைத் தேர்ந் தெடுப்பதிலும் உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்களின் பெயரை நீக்கியது. இவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய சூழ்நிலையில், கிழக்கு மாகாணத்திற்கு முக்கியத் துவம் அளிக்க விரும்பிய பிரபாகரன், அதுவரை சிங்கள அரசின் காவலில் இருந்து, அப்போது விடுவிக்கப்பட்ட பத்மநாபன் என்பவரை முதல்வர் பதவிக்குப் பரிந்துரை செய்தார். இந்த நியாயமான கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்தது.

விடுதலைப்புலித் தலைவர் திலிபன் இறந்த 15 நாட்களுக்குள் அடுத்த அதிர்ச்சி விடுதலைப்புலிகளுக்குக் காத்திருந்தது. தமிழ் நாட்டிலிருந்து இலங்கை திரும்பிக் கொண்டிருந்த 17 விடுதலைப் புலிகள் இலங்கை அரசினால் கைது செய்யப்பட்டு, ஆயுதங்களைக் கடத்தி வந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டனர்.

இந்திய இலங்கை உடன்பாடு ஏற்பட்ட பிறகு விடுதலைப் புலிகள் உடன்பாட்டை மீறும் வகையில் செயல்பட்டால், அவர்களைக் கட்டுப்படுத்தும் உரிமை இந்திய அரசுக்கு மட்டுமே உண்டு.



ஏனெனில் விடுதலைப்புலிகள் இந்த உடன்பாட்டில் நேரடியாக ஈடுபடாதவர்கள். இந்திய அரசின் தலையீட்டினாலேயே இவ் உடன்பாட்டை ஏற்றுக் கொண்டவர்கள். இந்த நிலையில் விடுதலைப் புலிகள் காங்கேசன்துறையிலிருந்து தமிழ்நாடு செல்லும் வழியில் கைது செய்யப்பட்டனரா அல்லது தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வழியில் கைது செய்யப் பட்டனரா? என்பது குறித்து இந்திய இலங்கை அரசிடமிருந்து மாறுபட்ட தகவல்கள் வந்தன. ஆயுதங்களை விடுதலைப்புலிகள் கடத்தி வந்தனர் என்றால் அவற்றை வெளியுலகுக்கு இலங்கை அரசு காட்டியிருக்கலாம். மாறாக கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளை இலங்கை அரசு, கொழும்புக்குக் கொண்டுச் செல்ல முயன்ற போது, இந்திய அரசு தடுக்கவில்லை. இந்திய அரசு எதுவும் செய்யாததால், இலங்கை அரசு துணிவுப் பெற்று காரியத்தில் இறங்கியது.

விளைவு, தமிழ்த் தளபதிகள் குமாரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 விடுதலைப்புலி தளபதிகள் தற்கொலைச் செய்து கொண்டார்கள். அதிர்ச்சிக்குள்ளாக்கப்பட்ட தமிழர்கள், சிங்கள மக்களை வெட்டிச் சாய்க்கின்றனர். பெரும் வன்முறை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் மீது இந்திய அமைதிப் படை நடவடிக்கை எடுக்கத் துணிந்தது. இதற்குக் காரணமாக, விடுதலைப் புலிகள் அப்பாவி சிங்கள மக்களை வெட்டிக் கொன்றதால் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகக் கூறியது. இங்கு ஒன்றை நினைவில் கொண்டு வர வேண்டும்.

இந்திய முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட போது, டில்லியில் ஒரு சமூகத்தைச் சார்ந்த சுமார் 5,000 பேர் கொல்லப்பட்டனர். பெரும் கலவரம் வெடித்தது. அப்போது பிரதமர் இராஜிவ் காந்தி, 'பெரிய விருட்சகம் ஒன்று சாயும் போது பூமி நடுங்கத்தான் செய்யும்' என்று கூறினார்.

விடுதலைப்புலிகளின் இராணுவத் திறமையை இன்று அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளின் இராணுவத் தலைவர்கள் பேசத் தொடங்கிவிட்டார்கள். இந்திய அமைதிப் படைத் தலைவர் சர்தேசு பாண்டே, பிரார் மற்றும் கல்கத், இந்திய தூதுவராக இருந்த தீட்சித் போன்றவர்களும் இன்று அவர்களுக்கு உள்ள செல்வாக்கையும் எடுத்துக் கூறுகின்றனர்.

இந்நிலையில், 16.10.87 இல் பிரபாகரன் அப்போதைய பிரதமர் இராஜீவ் காந்தியிடம் போர் நிறுத்தம் கோரி கடிதம் அனுப்புகிறார். இந்திய அமைதிப்படை யாழ்பாணத்தை நெருங்குகின்ற காரணத்தால், தோல்வியிலிருந்து விடுபடவே பிரபாகரன் போர் நிறுத்தம் கோருகிறார் என்று காரணம் காட்டி அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. விளைவு இந்தியப் படை, பாகிஸ்தானுடன் போர் தொடுத்த போது ஏற்பட்ட விளைவை விட அதிக இழப்புகளைச் சந்திக்க நேரிட்டதாக அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்தனர்.

மீண்டும் போர் நிறுத்தம் கோரி கடிதம் அனுப்பினார் பிரபாகரன். அதுவும் நிராகரிக்கப்பட, தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த பிணையக்கைதிகளாகப் பிடித்து வைக்கப் பட்டிருந்த 18 இந்திய இராணுவ வீரர்களை விடுதலை செய்தனர். இவர்களைச் சந்திக்கப் பத்திரிக்கை நிருபர்கள் அனுமதி மறுக்கப் பட்டனர்.

இந்த பிணையக் கைதிகளில் சிலரை 'டயரை' தலையில் மாட்டி உயிருடன் எரித்ததாக இ.காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பேசினர். பாராளு மன்றத்தில் பொய்யான தகவல்களைத் தருவது இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படிக் குற்றமாகும்.

விடுதலைப்புலிகள் நமது இந்திய இராணுவ வீரர்களை விடுதலை செய்ததால் தர்ம சங்கடத்திற்கு உள்ளான இந்திய அரசு 48 மணி நேர போர் நிறுத்தத்தை அறிவித்தது. ஆனால் விடுதலைப்



புலிகளின் தளபதிகள் ஒன்று சேர்ந்து ஆலோசனை செய்ய இந்த கால இடைவெளி போதவில்லை. மேலும் இந்த போர் நிறுத்தம் விடுதலைப்புலிகளால் மீறப்பட வில்லை. ஆனால் புலிகளிடமிருந்து எந்த தகவலும் வரவில்லை எனக் காரணம் கூறப்பட்டு இந்திய அமைதிப்படை நடவடிக்கையைத் தொடர்ந்தது.

மட்டகளப்பில் தமிழர்கள் சிங்கள போலிசாரால் படுகொலைச் செய்யப்பட்டனர். இந்திய அமைதிப்படை எவ்வித கண்டனமும் செய்யவில்லை. சிங்கள மக்களின் உள்நோக்கங்களையும் எண்ணங் களையும் பல கோணங்களில், பல முறைகளில் விடுதலைப்புலிகள் இந்திய அரசுக்கு எடுத்துக் கூறிய போதும் அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இந்திய இலங்கை உடன்பாட்டை முறியடிக்கின்ற வகையில் சிங்கள போலிசார் செய்த படுகொலையையும் கண்டிக்க வில்லை. மேலும் இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பிற்கு இந்திய அமைதிப்படை உறுதுணைப்புரியும் வகையில் இந்திய இலங்கை உடன்பாட்டில் வழிவகைச் செய்யப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1988 ஜனவரியில் பிரபாகரன் இந்திய அரசிடம் மீண்டும் போர் நிறுத்தக் கோரிக்கையை எழுப்புகிறார். இதில் அக்டோபர் 9, 1987 நிலைக்கு இந்திய அமைதிப்படை செல்ல வேண்டும் என்ற நிபந்தனையையும் விதிக்கிறார். நிபந்தனையுடன் கூடிய இந்த கோரிக்கையை நமது அரசு எளிதில் நிராகரித்தது.

மேலும் விடுதலைப்புலிகளால் யாழ்ப்பாணத்தில் தடை செய்யப்பட்டிருந்த 'டெலோ' இயக்கத்திற்கு எல்லா உதவிகளையும் நமது அமைதிப்படை செய்தது. டெலோ இயக்கத்தினர் யாழ்ப் பாணத்தில் அலுவலகம் திறக்க உதவிபுரிந்தனர்.

1988 பிப்ரவரியில் போர் நிறுத்தம் அறிவிக்கப்பட வேண்டும், விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை தொடங்கப்பட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன் வைத்து 'அன்னையர்

முன்னணியர்' என்ற அமைப்பைச் சேர்ந்த இரு பெண்கள் சாகும் வரை உண்ணாநிலை மேற்கொண்டனர். அவர்களின் உணர்வு களை மதிப்பதாக புலிகள் அறிவித்தனர். ஆனால் நமது அரசு செவிசாய்க்கவில்லை. மாறாக, அன்னம்மா டேவிட் என்ற பெண்மணி உண்ணாநிலையிலிருந்து கட்டாயப்படுத்தித் தூக்கி வரப் பட்டார். மற்றொரு அம்மையார் **அன்னை பூபதி** தன் உயிரை ஈந்தார்.

இதன் விளைவாக இந்திய அரசு அதிகாரிகள் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தையைத் தொடங்கினர். **ஜொனி, இரகீம்** என்ற விடுதலைப்புலிகள் பிரபாகரனைச் சந்திப்பதற்காக, தூதர்களாக சென்னையிலிருந்து இந்திய கெலிகாப்டரில் யாழ்ப் பாணம் அழைத்துச் செல்லப்படுகின்றனர். பேச்சு வார்த்தைகளில் தொடக்கக் காலங்களிலிருந்து குழப்பங்களையும் தவறானத் தகவல் களையும் நமது அரசுக்குத் தெரிவித்துக் கொண்டிருந்த நமது இலங்கைக்கான தூதர் திரு. தீட்சித் உடன் பேச்சுவார்த்தையில் பங்கு பெற புலிகள் மறுக்கின்றனர். இதனிடையில், பேச்சு வார்த்தையில் ஏற்பட்ட நடவடிக்கைகளை பிரபாகரனிடம் தெரிவிக்கப் போன **ஜொனி** இந்திய அமைதிப்படையால் சுட்டுக் கொல்லப்படுகிறார்.

1988 ஏப்ரல் முதல் வாரத்தில் நமது அமைதிப்படையின் தலைமை தளபதி மேஜர் ஜெனரல் சர்தேசு பண்டே, பலாலியிலுள்ள இராணுவ தலைமையகத்தில் யு.என்.ஐ. நிருபருக்கு பேட்டி அளித்தார். அதில், 'விடுதலைப்புலிகளுக்கு யாழ்ப்பாண மக்களில் 90 சதவிகிதம் பேர் ஆதரவு அளிக்கின்றனர்' என்று கூறினார். அதற்கு நிருபர், 'இது உண்மையானால் மக்களின் ஆதரவு பெற்ற விடுதலைப் புலிகள் மீது ஏன் இந்த இராணுவ நடவடிக்கை' என்ற வினாவை எழுப்பினார். அதற்கு பாண்டே 'இதை இந்திய அரசியல் தலைவர்களிடம் கேளுங்கள்' என்றார்.



மேலும் பாண்டே பின்வருமாறு கூறினார், 'யாழ்ப்பாணம் விடுதலைப் புலிகளின் கோட்டையாக இருந்தது. இனிமேலும் இருக்கும். விடுதலைப்புலிகளுக்கு ஆயுத தட்டுப்பாடே இல்லை. ஒன்று விடுதலைப்புலிகள் பெருமளவு ஆயுதங்களை மறைத்து வைத்திருக்க வேண்டும். அல்லது ஆயுதங்கள் அவர்களுக்கு தொடர்ந்து வந்து கொண்டேயிருக்க வேண்டும். புலிகள் தினமும் இராணுவ வாகனங் களைத் தகர்க்கின்றார்கள். வெடி குண்டுகளை வீசுகின்றார்கள். இதனால் இந்திய இராணுவத் திற்கு பெரும் இழப்பு ஏற்படுகின்றது. இந்த யுத்தம் முடிவுக்கு வருவதாக இல்லை. யாழ்ப்பாணத்தில் அமைதி ஏற்பட்டு வருகின்றது. ஆனால் நிலைமையை இந்திய இராணுவம் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட்டது என்று கூறி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது'.

இதனைத் தொடர்ந்து பாண்டே அவர்கள் நமது அரசால் டெல்லிக்கு அழைக்கப்படுகின்றார். மறுப்பு அறிக்கை வெளியிடு மாறு வற்புறுத்தப்படுகின்றார். அவர் மறுக்கவே வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் வாயிலாக மறுப்பு அறிக்கை வெளியிடப் படுகின்றது.

இலங்கைக்கான நமது தூதர் திரு. தீட்சித் அவர்கள் லண்டன் பத்திரிக்கைக்கு அளித்த பேட்டி ஒன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதில் இந்திய இலங்கை உடன்பாட்டை ஏற்கச் செய்வதற்காக பிரபாகரனுக்கு பத்து கோடி ரூபாய் கொடுக்க இந்திய அரசு முன் வந்தது என்று கூறினார்.

இதை ஆராயுமுன் தீட்சித்தைப் பற்றி தெரிந்து கொள்வோம். இந்திய இலங்கை உடன்பாட்டை ஏற்க பிரபாகரன் மறுத்த போது, பிரதமர் இராஜிவ் அவர்கள் சில உறுதி மொழிகளை அளித்தபின் அவ்வுறுதி மொழிகளை நம்பி, உடன்பாட்டை நடைமுறைபடுத்து வதற்கு உதவுவதாக பிரபாகரன் கூறினார். இது குறித்து தீட்சித்– இடம் நிருபர்கள், 'எதிர் காலத்தில் உருவாக்கப்பட உள்ள இடைக்

கால ஆலோசனைக் கவுன்சில் முதல்வர் பதவியை பிரபாகரனுக்கு அளிப்பது என்பதை இந்தியா வாக்குறுதியாக வழங்கியதாக கூறப்படுகின்ற செய்தி உண்மையா?' என்று கேட்டனர். அதற்கு தீட்சித், 'இந்த செய்திகள் உண்மையானவை அல்ல. இத்தகைய கோரிக்கையை பிரபாகரன் முன் வைக்கவில்லை. அவர் மிகவும் கொள்கைப்பிடிப்புள்ள இலட்சியத் தலைவர்' என்று பதிலளிக்கிறார் (சான்று: தினமணி 3.8.87).

அதே திட்சித் பிரபாகரனுக்கு ரூபாய் பத்து கோடி கொடுக்க இந்திய அரசு முன் வந்தது. அதில் முதல் தவணையாக ரூபாய் ஐம்பது இலட்சம் அளிக்கப்பட்டது என்றெல்லாம் கூறினார். மேலும் அவர், விடுதலைப்புலிகளும் இலங்கை அரசும் நேரடி பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளன. அதில் கிழக்கு மாகாணத்தைத் தேர்தல் நடத்தாமல் விடுதலைப் புலிகள் நிர்வாகம் செய்ய ஒப்புக் கொண்டுள்ளனர் எனவும், இது இந்திய இலங்கை உடன்பாட்டைத் தகர்க்க சதி எனவும் விடுதலைப்புலிகள் மீது மட்டும் அவதூறு கூறும் வகையில் அறிக்கை வெளியிட்டார்.

தமிழ்நாட்டில் நடைபெறும் வெடிகுண்டு சம்பவங்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் நேரடித் தொடர்பு இருப்பதாக புலனாய்வுத்துறைக்கு ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக பெரும் புரளியைக் கிளப்பி விட்டார்.

இவையெல்லாம் வெறும் புரளி என்பதை இலண்டனில் நடை பெற்ற இலங்கைத் தமிழர்கள் மாநாட்டில் விடுதலைப் புலிகளால் நிருபிக்கப்பட்டது (தினமணிக்கதிர் 22.5.88). இவற்றையெல்லாம் அலசி ஆராயும் போது திட்சித்தின் மன மாற்றத்திற்கு காரணம் என்ன வென்பதை எளிதாக அறிய முடிகிறது.

ஈழத்தமிழர்களின் பிரச்சனைகளில் இந்தியாவின் நிலை இவ்வளவு மோசமானதற்கு காரணம் திட்சித்தின் முதிர்ச்சியற்ற முடிவுகளும் பரிந்துரைகளுமே என நமது மைய அரசு தீர்மானித்து,



இலங்கைக்கான தூதர் பதவியிலிருந்து அவரை விடுவிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன.

தீட்சித்தை நீக்குவதன் மூலம் பிரச்சனையை ஓரளவு சுமுகமாக தீர்க்க முடியும் என்ற முடிவுக்கு மைய அரசு வந்ததையடுத்து அதை தர்ம சங்கடத்தில் ஆழ்த்தவே, லண்டன் பத்திரிக்கையில் பேட்டி அளித்தார்.

இதன் பின் விடுதலைப்புலிகளுடன் இந்திய புலனாய்வுத் துறை (ரா) பேச்சு வார்த்தையை நடத்தியது.

இந்த நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து தமிழர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கும் செய்தி ஒன்று வெளியானது. பிரபாகரனைப் பிணமாகவோ அல்லது உயிருடன் பிடிக்கவோ 6000 இந்திய வீரர்கள் காடுகளில் தேடி வருவதாகவும், இவர்கள் திரிபுரா மாநிலக் காடுகளில் பயிற்சிப் பெற்றவர்கள் எனவும் செய்தி கள் வெளியாயின. இதன் விளைவாகத் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பை அடுத்து இந்த செய்தியை மறுத்தாலும் இந்த தேடுதல் வேட்டையில் பல புலிகள் உயிரிழந்தனர் என்பதும் பிரபாகரன் மாத்தையாவால் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார் எனப் புரளி பரவியதும் அதனால் நமது அமைதிப்படை தேடுதல் வேட்டையிலிருந்து பின்வாங்கிக் கொண்டதும் வரலாற்று உண்மை.

1988 ஏப்ரல் மாத முதல்வாரத்தில் கிழக்கு மாகாணத்தில் தமிழர் களும் முஸ்லிம் மக்களுக்கும் ஏற்பட்ட சண்டைகளுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என இந்திய அரசு குற்றஞ் சாட்டியது. ஆனால் சம்பவங்கள் நடைபெற்ற இடங்களில் கிடைத்த ஆயுத தளவாடங் களில் பாகிஸ்தான் ஆயுத தளவாட தொழிற்சாலையின் முத்திரை கள் காணப்பட்டதாக செய்திகள் வெளியாயின. மேலும் மோதல் தொடர்பாக கைது செய்யப்பட்ட சில இளைஞர்கள் பாகிஸ்தானில் தாங்கள் பயிற்சிப் பெற்றதாகக் கூறியதாக இந்திய அமைதிப்படை மேற்கொண்ட புலனாய்வு நடவடிக்கைகளில் கண்டு பிடிக்கப்

பட்டதாவும் செய்திகள் வெளியாயின.

நமது நாட்டின் மீது புலிகள் வைத்துள்ள அன்பை வெளிப் படுத்தும் விதமாக பிணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்த இந்திய இராணுவ வீரர்களை விடுதலை செய்தனர். அவ்வாறு விடுதலை செய்யும் பொறுப்பு புலிகளால் ஒப்படைக்கப்பட்டிருந்த தினேசு என்ற விடுதலைப்புலி, 'இந்திய மக்களின் மீது நாங்கள் கொண்டிருக்கும் அன்பையும் மதிப்பையும் வெளிப்படுத்த இவரை விடுதலை செய்கிறோம்' என்றார். மேலும் தினேசையும் அவருடன் வந்த விடுதலைப் புலிகளையும் இந்திய அமைதிப்படையினர் சிறிது நேரம் தங்கச் சொன்ன போது, இந்திய அமைதிப்படை அதிகாரியிடம், 'நாங்கள் இந்திய வீரர்களை விடுவிக்க மட்டுமே எம் தலைவரால் அனுப்பப்பட்டோம். பேச்சு வார்த்தை இந்த நடவடிக்கையுடன் சேர்க்கப்படவில்லை' என்றார். இதன் மூலம் தம்மை போன்ற புலிகள் தம் தலைவர் மீதும் இயக்கத்தின் மீதும் எவ்வளவு அன்பும் மதிப்பும் வைத்துள்ளனர் என்பதை உலகுக்கே எடுத்துக் காட்டியுள்ளார் (இந்தியன் எக்ஸ்பிரஸ் 14.5.88).

'இந்திய அமைதிப்படை நடவடிக்கையின் போது விமானங் களைத் தாக்கும் ஏவுகணை ஒன்று விடுதலைப் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகவும் இது புலிகள் இந்திய அமைதிப்படையுடன் நீண்டகால போரில் ஈடுபட உள் நோக்கம் கொண்ட சக்திகளால் அளிக்கப்பட்டுள்ளது' என்றார் தீட்சித்.

இந்த ஆயுதங்கள் ஏவுகணைகள் இந்திய அரசால் வழங்கப் பட்டவை எனவும் அவற்றை இயக்குவதற்கு இந்திய அரசால் பயிற்சி அளிக்கப்பட்டன எனவும் புலிகள் தெரிவித்தனர். மேலும் மூன்றாவது சார்க் மாநாடு பெங்களூரில் நடைபெற்ற போது, இலங்கை அதிபர் ஜெயவர்த்தனேவுக்கு ஆபத்து வராமல் தடுப்பதற்காக புலிகளிடமிருந்து தமிழக அரசால் கைப்பற்றபட்ட ஆயுத தளவாடங்களில் இவை இருந்தன என்றும் புலிகள் கூறினர். புலிகள்



கூறியவை உண்மை என்பது 'ஃப்ரண்ட்லைன்' 1986 நவம்பர் 15–28 இதழில் வந்துள்ள செய்தியைப் பார்த்தால் புரியும். அந்த ஏவுகணைகளில் இரகசிய முத்திரைகள் காணப்பட்டதாக செய்திகள் வெளி வரத் தொடங்கின. நமது அரசு இதற்கு என்ன விளக்கம் தரப் போகிறது?. நமது படையுடன் புலிகள் நீண்டகாலப் போரில் ஈடுபட இரகசிய அரசு சதி செய்கிறது என்றா கூறப்போகின்றது?

இந்திய இலங்கை உடன்பாடு ஏற்படுவதற்கான பின்னணியையும் அதன் பின் நடந்த சில சம்பவங்களையும் சுருக்கமாக எழுதினேன்.

அடுத்து அந்த காலகட்டங்களில் தமிழகப் பத்திரிக்கை உலகில் நடுநிலை ஏடுகள் எனக் குறிப்பிடப்படும் 'தினமணி' மற்றும் 'துக்ளக்' ஆகியவை எவ்வாறு உண்மைக்கு மாறான செய்திகளை முரண் பாடுகளுடன் வெளியிட்டன என்பதை சான்றுகளுடன் பின்வரும் பகுதிகளில் விளக்கவுள்ளேன்.

## தினமணி

*1987–இல் இந்திய இலங்கை உடன்பாடு மற்றும் அது தொடர்பான நிகழ்ச்சிகளைப் பற்றி தமிழகத்தில் நடுநிலை நாளேடு என்று கூறிக் கொள்ளும் தினமணியில் வெளிவந்த தலையங்களின் சில பகுதி களும் அதில் கூறப்பட்டுள்ள முரண்பாடுகளும் தரப்பட்டுள்ளன. அந்த முரண்பாடுகளை நன்கு வெளிப்படுத்தும் வகையில் விடை களும் தரப்பட்டுள்ளன. ஊன்றிப்படியுங்கள்.*

***1987– ஆகஸ்ட் 6, 'முக்கியமான முடிவு' என்ற தலைப்பில் எழுதப்பட்ட தலையங்கத்தில் சில வரிகள்;***

***"ஒப்பந்தத்தை அனேகமாக அனைவரும் வரவேற்றுள்ள போதிலும் எல்.டி.டி.ஈ. இதனை முழுமையாக ஆதரிக்கவில்லை என்பது தெளிவு. இது பற்றி சில சந்தேகங்களை அவர்கள் தெரிவித்தனர். இதனால் ஆயுதங்களை ஒப்படைக்க எல்.டி.டி.ஈ. இணங்குமா என்பது பற்றி நிச்சயமற்ற நிலைமை காணப்பட்டது. இப்போது அது நீங்கிவிட்டது. ஆயுதங்களை ஒப்படைப்பது என்ற முடிவை யாழ்ப்பாணத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் அறிவித்த எல்.டி.டி.ஈ.யின் தலைவர் திரு. வி.பிரபாகரன், இந்த ஒப்பந்தத்தைத் தாங்கள் கடுமையாக எதிர்ப்பதாகவும், அது தங்கள் மீது திணிக்கப்பட்டிருப்பதாகவும் கூறியிருக்கிறார். வேறு வழியில்லாமல் இதனை ஏற்றுக் கொள்வதாக அவர் கூறியிருக் கிறார். கடந்த காலத்தில் சிங்களர்கள் நடந்து கொண்டவிதமே, இந்த ஒப்பந்தம் சம்மந்தமாக அவருடைய எதிர்ப்புக்கு காரணம் என்பது தெளிவு. எனினும் இந்திய அரசிடம் நம்பிக்கை வைத்து ஆயுதங்களை ஒப்படைப்பதாக பிரபாகரன் கூறியிருக்கிறார். இந்திய அமைதிப்படையுடன் அவர் ஒத்துழைக்க முன் வந்தி ருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். ஒரு நாட்டிற்கு***



***இந்திய அமைதிப்படை அனுப்பப்பட்டிருப்பதே முக்கியமான நிகழ்ச்சியாகும். இந்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டதற்கு இப்போது காணப்பட்ட நிர்பந்த சூழ்நிலையும் ஒரு காரணமாகும். இந்த சூழ்நிலைகளை பிரபாகரன் உணர்ந்திருப்பதைக் காணலாம். தம்முடைய இயக்கத்திலுள்ள இளைஞர்களை இந்த முடிவுக்கு இணங்க வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது"***

*இந்த தலையங்கத்தில் பிரபாகரனின் நிலையைப் பற்றி, அதாவது உடன்பாடு ஏற்பட்ட சூழ்நிலை, இந்திய அமைதிப் படை யின் பணி, ஆயுதங்கள் ஒப்படைப்பு ஆகியவைப்பற்றி தெளிவாக தினமணி கூறியுள்ளது.*

***1987 செப்டம்பர் 28, 'திலிபனின் உயிர்த்தியாகம்'***

***"அந்நேரத்தில் அவரை பிரபாகரன் விரும்பியிருந்தால் காப்பாற்றி இருக்க முடியும். அவ்வாறு அவர் செய்யாமல் விட்டது அவரது மனிதாபிமானமற்ற சுயநலப்போக்கையே காட்டு கின்றது. இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கும் அவரே பொறுப்பாவார்"***

***"விடுதலைப்புலிகள் உட்பட போராளிக் குழுக்களைக் கடுமையாக எச்சரித்து அவர்களிடம் எஞ்சியிருக்கும் ஆயுதங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கும் நேரத்தில் விடுதலைப்புலிகள் முன் வைத்திருக்கும் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றித்தர இலங்கை அரசை கண்டிப்புடன் வற்புறுத்த வேண்டியது அவசிய மாகி விட்டது"***

***"தொடர்ந்து அமைதி காப்பதற்காக உடனடியாக இந்திய அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் இருக்கின்றன. இன்னும் சிறை வைக்கப்பட்டுள்ள போராளிகள் மற்றும் அப்பாவித் தமிழர்களை விடுவித்தல், சர்ச்சைக்கு இடமில்லாத பிரதிநிதி களைக் கொண்டு வடக்கு கிழக்கு மகாணத்திற்கான இடைக்கால***

**நிர்வாகத்தை ஏற்படுத்துதல், நிரந்தர நிர்வாகத்திற்கான தேர்தல் நடத்தும் வரை கிழக்கு மகாணத்தில் சிங்களர் குடியேற்றத்தைத் தடுத்தல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதில் இந்திய அரசின் உந்துதலும், வற்புறுத்தலும் இருக்க வேண்டும்"**

திலிபன் உண்ணாவிரதத்தை மேற்கொண்ட போது இந்திய அரசு அலட்சியப்படுத்தியது. இந்திய இலங்கை உடன்பாடு ஏற்பட்ட போது உடன்பாடு தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசை நிர்பந்திப்பது இந்திய அரசின் கடமையாகும். விடுதலைப்புலிகளின் விசயங்களில் மட்டும் ஆயுதங்களை ஒப்படைப்பதிலாகட்டும் மற்ற விசயங்களிலாகட்டும் இந்திய அரசு கடுமையாக இருந்தது. இதன் விளைவே திலிபனின் உண்ணாநிலை. திலிபனின் உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் இந்திய தூதர் தீட்சித் பிரபாகரனுடன் பேச்சு வார்த்தை நடத்தினார். இதை ஒரு வார காலத்திற்கு முன்பே தொடங்கியிருந்தால் திலிபன் உயிர் காப்பற்றப்பட்டிருக்கும். ஆனால் 'விடுதலைப்புலிகள் முன் வைத்திருக்கும் நியாயமான கோரிக்கைகள்' என்று குறிப்பிட்ட தினமணி, அதை நிறைவேற்ற போராடினால், அதை பிரபாகரனின் சுயநலம் என்கிறது. மனிதாபிமானமற்ற போக்கு என்று எழுதுகிறது. இதுதான் நடுநிலையோ?

தமிழர்களுக்கு வீரத்தில் நீண்ட வரலாறே உண்டு. புறநானூற்றில் பல காட்சிகளும் உண்டு.

முதல் நாள் போர் முரசு ஒலி கேட்டு தனது தந்தையை அனுப்பி போரில் பலி கொடுத்தவள், இரண்டாம் நாள் போர் முரசு கேட்டு தன் கணவனைப் போர்களத்திற்கு அனுப்பி பலி கொடுத்தவள், மூன்றாம் நாள் முரசு ஒலி கேட்கவும், என்ன செய்வது என்று திகைக்க, அவளது சிறு வயது பாலகன் நினைவுக்கு வர, அவனை மஞ்சள் நீராட்டி தலைவாரி பூச்சூட்டிப் போருக்கு அனுப்புகிறாள்.



போரில் அவனும் மாண்டு போகின்றான். இத்தாயை, வீரத்தாய் என்று காவியம் கூறுகின்றது. போற்றுகின்றது. ஆனால் பிரபாகரன் இதைச் செய்தால் மனிதாபிமானமற்ற சுயநலபோக்கு என்கிறது தினமணி.

**1987 அக்டோபர் 15, 'போரை நிறுத்தவும் பேச்சைத் தொடங்கவும்'**

**"ஆயுதங்களை முற்றிலும் ஒப்படைத்து விட்டோம் என்று எல்.டி.டி.ஈ கூறியது உண்மைக்கு புறம்பானது என்று இப்போது தெரிந்து விட்டது"**

புலிகளிடம் உள்ள ஆயுதங்களில் 10 சதவிகிதத்தை மட்டும் பெயரளவுக்கு ஒப்படைத்தால் போதும் என்ற உறுதி மொழியை இந்திய அரசு அளித்த பின்னரே ஆயுத ஒப்படைப்புக்கு பிரபாகரன் இணங்கினார் என்பதை அப்போதைய இந்திய அமைதிப்படை கமாண்டர் திரு. கல்கத் அவர்கள் பின்னாளில் ஒன்றுக்கு மேற்பட்ட சமயங்களில் கூறியுள்ளார்.

மேலும் இந்திய அரசால், 1985–இல் திம்புவில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் புலிகள் நாடு கடத்தப்பட்ட சம்பவத்தினாலும் 1987 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னையில் அவர்களுடைய ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவங்களாலும் இந்த உடன்பாடு ஏற்படும் சூழ்நிலையில் இந்திய அரசு தனிப்பட்ட முறையில் பிரபாகரனிடம் நடந்து கொண்ட முறையிலும், கிட்டதட்ட வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட நிலை போன்று டில்லி அசோக் ஓட்டலில் பிரபாகரன் அடைக்கப்பட்ட நிலையாலும் புலிகள் முழு நம்பிக்கையுடன், முழு மனதுடன் ஈடுபடுவார்கள் என்று எதிர் பார்ப்பது சரியான அணுகுமுறையாக இருக்காது. மேலும் இதே தலையங்கத்தில்,

**"வடக்கு கிழக்கு மகாணங்களுக்கான இடைக்கால நிர்வாக அமைப்புக்கு எழுத்து மூலமாக ஏற்பட்ட ஒப்பந்தத்திலிருந்து**

**பிரபாகரன் பின்வாங்கியதால் அரசியல் தீர்வு தவிர்க்கப்பட்டு வன்முறை தலைதூக்கிவிட்டது"**

*என்று எழுதியுள்ளது.*

*இடைக்கால நிர்வாக அமைப்பு என்று கூறுவது தினமணி போன்ற நாளிதழ்களுக்கு அழகல்ல. அது இடைக்கால ஆலோசனைக் கவுன்சில். இதில் உறுப்பினர்களாகச் சேர்க்க புலிகளால் பரிந்துரை செய்யப்பட்ட உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் பெயரை சிங்கள அரசு நிராகரித்தது. மேலும் கிழக்கு மகாணத்தைச் சேர்ந்த திரு. பத்மநாபன் அவர்களின் பெயரை முதல்வர் பதவிக்கு புலிகளால் பரிந்துரை செய்யப்பட்டதையும் சிங்கள அரசு நிராகரித்தது. இதையே தினமணி இதே தலையங்கத்தில் பின்வருமாறு கூறுகிறது,*

**"இடைக்கால நிர்வாக அமைப்பு விவகாரத்தில் பிரபா கரனின் செயல்முறை முற்றிலும் தவறானது என்றாலும் கிழக்கு மகாணத்தைச் சேர்ந்த பத்மநாபன் இடைக்கால நிர்வாகத்துக்குத் தலைமை தாங்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கைக்கு வறட்டு கௌரவம் பார்க்காது இலங்கை அரசை இணங்கச் செய்ய வேண்டும்"**

*'ஒப்பந்தத்திலிருந்து பிரபாகரன் பின்வாங்கியதால் வன்முறை' என்று இரண்டு வரிகளுக்கு முன் எழுதிய தினமணி, பின் பகுதியில், 'நியாயமான கோரிக்கைக்கு வறட்டு கௌரவம் பார்க்காது இலங்கையை இணங்கச் செய்ய வேண்டும்' என்று இந்திய அரசுக்கு அறிவுறுத்துகிறது. ஏன் இந்த முரண்பட்ட நிலை?*

*இன்னமும் இதே தலையங்கத்தில் கூறுகிறது,*

**"தமிழர் பெரும்பான்மை பகுதியான கிழக்கு மகாணத்தில் வலுவில் குடியேற்றப்பட்ட சிங்களரைக் காக்க இலங்கைப் படை செயல்படும் என்று ஜெயவர்த்தனே கூறியிருப்பது ஆத்திரமூட்டும் விஷமத்தனமாக செயலாகும்."**



**"அரசியல் அனுபவமும் முதிர்ச்சியும் இல்லாததால் பிரபாகரனும் அவருடைய போராளிகளும் எவ்வளவுதான் தவறுகள் செய்திருந்தாலும் அவர்களை ஈழ மக்களும் உலகத் தமிழரும் சுதந்திரப் போர் வீரர்கள் என்று கருதி வருவதை நாம் புறக்கணிக்க முடியாது"**

*'பிரபாகரனும் அவருடைய போராளிகளும் சுதந்திரப் போர் வீரர்கள் என்று ஈழ மக்களும் உலகத்தமிழர்களும் கருதி வருவதை நாம் புறக்கணிக்க முடியாது' என்று தினமணி எழுதுவதை நாம் மிக குறிப்பிடத்தக்க ஒன்றாகக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்.*

### *1987 அக்டோபர் 19, "கடைசி வாய்ப்பு"*

**"வன்முறைப் பாதை என்றுமே வாழ்வை தந்ததில்லை. அழிவுக்குத் தான் கொண்டு செல்லும். ஒரு பிணக்காட்டில் தமிழீழம் என்ற இலட்சியத்தைத் தொலைத்துவிட்டு நிற்கும் விடுதலைப் புலித்தலைவர் பிரபாகரன் இந்த உண்மையை இப்போது உணர்ந்திருப்பார்"**

*கொரில்லா போர் முறையை வன்முறை என்று சித்தரிக்க முயலுகின்றது தினமணி. விடுதலைப் போராட்டக் களத்தில் உள்ள வீரர்கள் நாட்டு விடுதலையை ஈண்டெடுக்க, மிகப் பெரிய அளவில் இராணுவ வீரர்களைக் கொண்ட அரசை எதிர்க்க, இக்கொரில்லா போர் முறையை பின்பற்றுவது இயல்பு. இத்தகைய முறை மூலமே வியட்நாமும், கியூபாவும், பாலஸ்தீனமும் அந்நாட்டு அரசுகளை எதிர்த்துப் போராடி வெற்றியை ஈட்டியுள்ளது.*

*புலிகள், 20,000 சிங்கள இராணுவ வீரர்களை அப்போதைய சண்டையில் அலறியடித்து ஓடச்செய்தனர். 80,000 இந்திய அமைதிப் படை வீரர்களைக் கடுமையாக எதிர்த்துப் போராடினர். மேலும் இந்திய அமைதிப்படையை எதிர்த்து போரிடும் போது தங்களுடைய வலிமையை இந்திய அரசுக்கு உணர்த்தவே புலிகள் முற்பட்டனர்.*

எனவே கடைசி வரையில் நேரடியான போரில் மட்டுமே புலிகள் ஈடுபட்டனர். கொரில்லா போர் முறையில் புலிகள் ஈடுபட்டி ருந்தால் இந்திய அமைதிப்படைக்கு மட்டுமல்ல எந்த நாட்டின் படை போரில் ஈடுபட்டிருந்தாலும் அவர்களுக்கு இழப்பு அதிகமாக ஏற்பட்டிருக்கும். புலிகளுக்கு இழப்பு குறைவாகவே இருந்தி ருக்கும். வியட்நாம் போரில் ஈடுபட்ட அமெரிக்காவிற்கு ஏற்பட்ட தோல்வி யும் இழப்பும் இதை உறுதி செய்கின்றது.

1992 மார்ச் மாதத்தில் சிங்கள இராணுவம் முல்லைத் தீவு காடுகளில் மூன்று பாட்டாலியன் படை வீரர்கள், கப்பல் மற்றும் விமானப்படை உதவியுடன் படையெடுத்த போது புலிகளின் கொரில்லாப்படை தாக்குதலால் பெரும் இழப்பு சிங்கள இராணுவத்திற்கு ஏற்பட்டது. ஓர் உயர் இராணுவ அதிகாரி உட்பட 26 இராணுவ வீரர்கள் பலியானார்கள். மேலும் சீன தயாரிப்பான 'டி–85 டாங்கிகள்' முதன் முதலாக சிங்கள இராணுவத்தால் பயன் படுத்தப்பட்டபோது அது புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி சேதமடைந்தது.

1993 நவம்பரில் புனேரியன் பகுதி சண்டையில் புலிகள் தமது முழுத் திறமையையும் காட்டி வெற்றிவாகை சூடினர். அப்போரில் 1000–இக்கும் மேற்பட்ட சிங்கள இராணுவ வீரர்கள் மாண்டனர். இவையெல்லாம் சில வரலாற்றுச் செய்திகள்.

பிணக்காட்டில் தமிழீழம் என்ற இலட்சியத்தைத் தொலைத்து விட்ட பிரபாகரன் என்று எழுதிய தினமணி இவற்றையெல்லாம் கூர்ந்து படிக்க வேண்டும்.

மேலும் தினமணி இதே தலையங்கத்தில்,

**"ஆனால் ஒரு கையைப் பின்னால் கட்டி வைத்து போரில் குதிக்கச் சொல்வது போல் பீரங்கிகளையும் விமானப்படைகளை யும் பயன்படுத்தாமல் சிறு ரக துப்பாக்கிகளையும் கையெறிக்**



**குண்டுகளையும் வைத்துக் கொண்டு முன்னேற வேண்டிய நிலை ஏற்பட்டது"** என்றும் உண்மைக்கு மாறான தகவல்களை எழுதியது.

விடுதலைப்புலிகள் என்பது இந்தியாவில் உள்ள காவல் துறை வீரர்களை போன்றவர்கள். அவர்களை 24 மணி நேரத்தில் ஒழித்து விடலாம் என்று அப்போதைய பிரதமர் இராஜீவ் கூறினார்.

இந்திய இலங்கை உடன்பாடு ஏற்பட்ட போது இந்திய அமைதிப் படை இலங்கை செல்லும் என்பதற்கான வழிவகையோ அல்லது ஒரு நிபந்தனையோ சொல்லப்படவில்லை. இலங்கை உதவி கோரினால் இந்தியா உதவும் என்றுதான் கூறப்பட்டது. ஆனாலும் உடன்பாடு ஏற்பட்ட உடனேயே இந்திய இராணுவ வீரர்கள் அமைதிப்படை என்ற பெயரில் அனுப்பப்பட்டனர். மேலும் இராஜிவ் காந்தி இலங்கை அதிபர் செயவர்த்தனேவுக்கு அனுப்பிய ஓர் அதிகாரப்பூர்வ செய்தியில், சில செய்ய வேண்டிய நடவடிக்கை களை, நாட்கள் வாரியாகக் கூறியுள்ளார். அதில் இடைக்கால அரசு அமைப்பது பற்றியும் விடுதலைப்புலிகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது பற்றியும் உறுதி மொழி அளித்தபின், பிரபாகரன் உடன்பாட்டை செயல்படுத்தவும் ஆயுதங்களை ஒப்படைக்கவும் இசைந்ததாகவும் கூறியுள்ளார். அதில் மேலும், பிரபாகரன் தனது சொல்லிருந்து பின்வாங்குவாரேயானால் இந்திய இராணுவம் தனது நடவடிக்கையின் மூலம் ஆயுதங்களை களையும் என்றும் கூறியுள்ளார். இந்த செய்தி ஃப்ரண்ட்லைன் பத்திரிக்கையில், 1991 ஆகஸ்ட் 31 செப்– 13, என்ற இதழில் வந்துள்ளது. இதை பின் இணைப்பாகக் கொடுத்துள்ளேன்.

அடுத்து, அப்போது புலிகள் 3000 பேர் மட்டுமே உள்ளதாகவும் இந்திய அரசால் கணிக்கப்பட்டன. உளவுத்துறை அதிகாரிகளும் இந்திய தூதரும் எவ்வளவு தூரம் இந்திய அரசையும் பிரதமரையும் தவறான வழிக்காட்டுதலுடன் அழைத்துச் சென்றனர் என்பதற்கு இதெல்லாம் சான்றுகள்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக இந்தியக் கடற்படை ஏவுகணைகளையும் இராக்கெட்டுகளையும் பயன்படுத்தியது பற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் 31.5.89 அன்று, '1987 ஆம் ஆண்டின் இறுதி மூன்று மாத காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் மற்றும் ஏவுகணைகளை ஏந்தி வருகின்ற படகுகளுக்கு எதிராக 'அலெச்' விமானங்கள் உபயோகிக்கப்பட்டன. இதன் மூலம் 60–இக்கு மேற்பட்ட புலிகளின் படகுகள் முழ்கடிக்கப்பட்டன. இந்திய கடற்படைக்குச் சொந்தமான விமானந்தாங்கி கப்பலான 'விக்ராந்த்' என்னும் போர்க்கப்பலிருந்து தான் இந்த விமானங்கள் புறப்பட்டுச் சென்றன' என்று இரண்டு ஆண்டுகள் கழித்து எழுதியது. இதெல்லாம் இந்திய இதழ்களின் தர்மம். நடுநிலை.

எனவே இந்தியப் படை இலங்கை செல்லும் போது முழு பலத்துடன்தான் சென்றது என்பதும், ஒரு கையை பின்னால் கட்டிக் கொண்டு வெறும் துப்பாக்கிகளுடனும் கையெறிக்குண்டுகளுடனும் போரிட்டது என்பது பொய் என்று புலனாகிறது.

**"ஆயுதங்களை ஒப்படைப்போம் என்றும், ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட்டு நடப்போம் என்றும் முன்பே பிரபாகரன் எழுத்து மூலம் உறுதி தந்தார். ஒப்பந்தத்தை இலங்கை மீறிச் செயல் பட்டதைச் சாக்காக வைத்து அவரும் அதை மீறி வன்முறை பாதைக்குத் திரும்பி விட்டார்."** – தினமணி.

ஒப்பந்தத்தை இலங்கை அரசு மீறியதாகக் கூறும் தினமணி இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டிய பொறுப்பு நமது அரசுக்கு உண்டு என்பதை சொல்ல துணிவு இல்லாமல் புலிகளின் மீது குற்றம்சாட்டுகின்றது.

**1987, நவம்பர் 2, இலங்கைத் தமிழரின் ஜீவாதார உரிமைகள்**

இந்த தலையங்கத்தில் இந்திய–இலங்கை உடன்பாடு பற்றி, உடன்பாடு ஏற்பட்ட மூன்று மாதங்கள் கழித்து ஆய்வு செய்கிறது தினமணி.



**"அனைத்து ஈழத்தமிழர்களும் பொதுவான சில அடைப் படை கருத்துக்களுக்கு இந்திய இலங்கை உடன்பாட்டில் உரிய இடம் அளிக்கப்படவில்லை என்றும், இப்பேச்சு வார்த்தைகளில் அவற்றை மறுபரிசிலனை செய்வது அத்தியாவிசயம் என்றும் இந்நேரத்தில் வலியுறுத்த விரும்புகிறோம்."**

**"தமிழ் மொழிக்கு உரிய இடத்தை இலங்கை அரசு தர மறுப்பது தான் அந்நாட்டு அரசியல் குழப்பங்களுக்கு எல்லாம் அடிப்படைக்காரணம். 1956–இல் சிங்களமே இலங்கையின் ஒரே அரசு மொழி என்று அறிவிக்கப்பட்ட பிறகுதான், ஈழத் தமிழர், இரண்டாம்தர பிரஜையாக இருக்க மாட்டோம் என்று கிளர்ந்து எழுந்தனர். இந்த அடிப்படை பிரச்சனைகளுக்கு இந்திய இலங்கை உடன்பாட்டில் சரியான தீர்வு காணப்படவில்லை".**

**"இலங்கை இந்திய உடன்பாடு பிரிவு 2.18–இல்**

The official language of Srilanka shall be Singhala. Tamil and English will also be official languages.

**இதில்** Shall,Will **என்ற சொற்களின் பொருள் வேற்றுமை தெரிந்த வர்களுக்கு சிங்களத்திற்குச் சமமாக தமிழ் ஏற்றுக் கொள்ளப்பட வில்லை என்பது புரியும்."**

இதை உடன்பாடு ஏற்பட்ட போது விடுதலைப்புலிகளும் மற்றும் அக்கறையுள்ளோரும் கூறிய போது தினமணியும் வலியுறுத்தியிருந்தால் இலங்கை மற்றும் இந்திய அரசுக்கு ஓர் அழுத்தம் ஏற்பட்டிருக்கும்.

**"வன்முறையில் இடம்பெயர்ந்தோர் மறுபடியும் தம் இருப்பிடங்களுக்குத் திரும்புமாறு சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்று உடன்பாடு கூறுகிறது (பிரிவு 2.4). இதை தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு இலங்கை அரசு கிழக்கு மகாணத்தில் புதிய சிங்களக் குடியிருப்புகளை நிலையாக்க முயற்சி செய்கிறது."**

*இந்தப் பிரிவின் துணைக்கொண்டு சிங்கள அரசு சிங்களர்களை தமிழ்ப்பகுதிகளில் குடியேற்றியதை எதிர்த்துதான் திலிபன் உண்ணா நிலை இருந்து உயிர் துறந்தார் என்பதை தினமணி நினைவில் கொள்ள வேண்டும்.*

***"வடக்கு மகாணத்துடன் இணைக்கப்படவிருக்கும் கிழக்கு மகாணம் மறுபடி பிரிக்கப்பட வேண்டுமா என்பதைத் தீர்மாணிக்க 1988 ஆம் ஆண்டு முடிவிற்குள் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று உடன்படிக்கை கூறுகின்றது (பிரிவு 2.3). இந்த பிரிவு வருங்காலத்தில் இன மோதல்கள் ஏற்பட வித்திடுகிறது"***

*தினமணி கூறிய இந்த பிரிவு (2.3) இன மோதல்களுக்கு வித்திடும் என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் இலங்கை அதிபர் செயவர்த்தனே, ஃபிரண்ட்லைன் (ஆகஸ்ட் 31–செப்டம்பர் 13, 1991) இதழ் பேட்டியில் கூறியுள்ளார். அதில் இந்திய பிரதமர் இராஜிவ் அவர்கள், தற்காலிகமான வடக்கு கிழக்கு இணைப்பைப் பற்றிக் கூறிய போது, "கிழக்கு மகாணத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குப்பின் ஏற்றுக் கொண்டேன். ஏனெனில் கிழக்கு மகாணத்தில் உள்ள சிங்கள மக்களும் முஸ்லிம் தமிழர்களும் இணைப்பை எதிர்ப்பார்கள். கிழக்கு மகாண தமிழ் மக்கள் வடக்கு மகாணத் தமிழர்களிடமிருந்து மாறுபட்டவர்கள்" என்று உண்மையைக் கூறியுள்ளார்.*

*இதே தலையங்கத்தில் இன்னும் ஆழமாகவே ஆய்வு செய்கின்றது தினமணி.*

***"இலங்கையின் பாதுகாப்பு மற்றும் காவல் படைகளில் தமிழர் மிகச் சிலரே இடம் பெற்றுள்ளனர். இதுவும் தமிழர் இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கருதப்படுகின்றனர் என்பதற்கு முக்கியமான சான்று",***



***"குடியுரிமையில்லாத ஏனைய இந்திய மரபினரும் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இலங்கையில் வாழ்வதால் அவர்களுக்கும் இலங்கை பிரஜா உரிமை வழங்க வேண்டும். அது எப்படியிருப்பினும் இந்தப் பிரச்சனையை ஈழ அரசியல் சிக்கல்களில் இந்திய இலங்கை உடன்பாடு சம்பந்தப்படுத்தியிருப்பது வரவேற்கத்தக்கதன்று. இந்த நிபந்தனையை இந்திய அரசு ஏற்றுக் கொண்டால்தான் உடன்பாடு அமுலுக்கு வரும் என்ற வாசகம் (பிரிவு 2.16) இலங்கை அரசுக்கு சாதகமாக இருக்கிறது."***

*தினமணி எடுத்துக் காட்டியுள்ள இந்தப் பிரிவுகள்தான் இந்திய இலங்கை உடன்பாடு நிறைவேறுவதில் சிக்கல் ஏற்படுத்தும் என்று விடுதலைப்புலிகளும் மற்றும் அக்கறையுள்ளோரும் கூறியிருந்தனர். இந்தக் கருத்துக்களை உடன்பாடு ஏற்பட்ட போது தினமணி எழுதியிருக்க வேண்டும்.*

***1988 ஜனவரி 27, "துப்பாக்கி முனையில் தேர்தல்"***

***"தமிழீழப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் பங்கேற்காத தேர்தல் எதுவும் மக்களின் சுதந்தரக் கருத்தை வெளிப்படுத்தும் வாக்கெடுப்பாக இருக்காது."***

*மேலே கூறப்பட்டவைகளிலிருந்து தினமணியே ஒன்றைத் தெளிவாக்குகின்றது. அதாவது இலங்கை தமிழ்மக்களிடையே புலிகளுக்கு செல்வாக்கு இருக்கிறது என்று.*

*இங்கே மேலும் ஒரு செய்தி சொல்லபட வேண்டும். உலக ஐக்கிய நாடுகள் சபையில் சீனாவை சேர்ப்பதற்கு பலத்த எதிர்ப்பு கிளம்பிய நேரத்தில், சீனாவுக்கு நமக்கும் உறவு சரியில்லாத நிலையிலும் இந்தியா தான் ஐக்கிய நாட்டு சபையில் சீனாவைச் சேர்க்க வேண்டும் என வாதிட்டது. மேலும் தனது வாதத்தில் உலக மக்கள் தொகையில் 5–இல் ஒரு பகுதியைக் கொண்ட சீனாவைச் சேர்க்காமல் இருப்பது உலக மக்களின் பிரதிபலிப்பை வெளிப்படுத்தும் சபையாக ஐ.நா. சபை இருக்காது என வாதிட்டது.*

*இந்த வாதம் இலங்கை இந்திய உடன்பாடு ஏற்பட்டபோது தமிழர்களின் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதில் புலிகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.*

**“எனவே 45,000 இந்திய துருப்புகள் இருந்த போதிலும் வாக்குச் சாவடிகளை அமைத்து, மக்களை அதில் பங்கெடுத்துக் கொள்ளச் செய்வது என்பது மிகவும் கடினமான காரியம். அப்படி நடத்தப் பட்டாலும் ஈழப்புலிகளின் அச்சுறுத்தலுக்குப் பயந்து, வோட் டளிக்க எல்லா மக்களும் முன்வர மாட்டார்கள்”.**

*1983 ஏப்ரலில் நடைபெற்ற தேர்தலைப் புறக்கணிக்குமாறு யாழ்ப்பாண மக்களுக்கு பிரபாகரன் வேண்டுகோள் விடுத்தார். அந்த தேர்தலில் 5 சதவிகித வாக்குகளே பதிவாயின. இது, அப்போதே பிரபாகரனுக்கு மக்களிடையே செல்வாக்கு இருந்ததைக் காட்டுகின்றது.*

*1988 இறுதியில் நடைபெற்ற வடக்கு கிழக்கு மகாணத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் மூன்று இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க வேண்டும். நமது இராணுவ வீரர்கள் 45,000 பேர் இந்திய அமைதிப் படையில் உள்ளனர் என்பது அதிகாரப்பூர்வமான செய்தி. அதாவது ஆறு தமிழ் ஈழ வாக்காளர்களுக்கு ஒரு இந்திய இராணுவ வீரர் என்ற நிலையில் தேர்தல் நடைபெற்றது.*

*யாழ்ப்பாணத்தில் 20 சதவிகித வாக்குகளும் வவுனியா பகுதியில் 40 சதவிகித வாக்குகளும் திரிகோணமலை, மட்டகளப்பு பகுதிகளில் 50 முதல் 60 சதவிகித வாக்குகளும் பதிவாகியதாக செய்திகள் வெளியிடப்பட்டன. மேலும் புலிகள் பெயரைச் சொல்லி, தற்போது புலிகள் இயக்கத்துடன் சேர்க்கப்பட்டுள்ள* ***ஈராஸ்*** *என்ற அமைப்பு யாழ்ப்பாணத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் வெற்றி பெற்றது. கிழக்கு மகாணத்தில் இந்திய அமைதிப்படை ஆதரவுடன் இயங்கி வந்த* ***இ.பி.ஆர்.எல்.எப்.*** *என்ற*



*தமிழர் அமைப்பு (திரு. பத்மநாபா அவர்கள் தலைமையில் இயங்கி வந்த அமைப்பு) வெற்றி பெற்று ஆட்சிப்பொறுப்பை ஏற்றது.*

*இந்த தலையங்கத்தில் முக்கியமான ஒரு செய்தியை தினமணி வெளியிட்டுள்ளது. அதாவது,*

**“தெற்கு ஆசியாவில் வல்லரசுகளின் ஆதிக்கத்தை கட்டுப் படுத்துவதற்காக இந்திய அரசு இலங்கையில் ஒரு படைத்தளத்தை ஒரு நிரந்தரமான ஏற்பாட்டில் வைத்துக்கொள்ள விரும்புகிறது என்பதை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரும் அதிகாரிகளும் தெரிவித்து வருகின்றனர். இலங்கையில் தமிழர் வாழும் பகுதி களில் அமைதியை நிலை நாட்டும் நோக்கம், இரண்டாம் பட்சமாகப் போய் விட்டதோ எனத் தோன்றுகிறது”.**

*இந்த உடன்பாடு ஏற்படுவதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது என்பதை தினமணியும் வெளிப்படுத்திவிட்டது.*

***1988 மார்ச் 1, “ இந்திய அரசின் இலங்கைக் கொள்கை”***

*அதில் கூறுகிறது தினமணி,*

**“ஆனால் இரண்டே மாதங்களில் இலங்கை அரசின் ஒரு பிரிவினரும் விடுதலைப்புலிகளும் ஒப்பந்தத்தை மீறும் நடவடிக்கைகளில் இறங்கியதால் விடுதலைப்புலிகளை ஒடுக்க வேண்டிய நிர்பந்தம் அமைதிப்படைக்கு ஏற்பட்டது.”**

*1987 நவம்பர் 2, தலையங்கத்தில் பலவித சிக்கல்களை ஆய்வு செய்த தினமணி, 1988 மார்ச் 1, தலையங்கம் எழுதும் போது விடுதலைப் புலிகள் உடன்பாட்டை மீறினர் எழுத துணிந்து விட்டது. விடுதலைப்புலிகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்கான காரணத்தைத் தேடிப்பிடித்து கூறிய தினமணி மேலும் கூறுகிறது,*

**“இந்த நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியவர்கள் இலங்கை ஒப்பந்தத்தின் எதிரிகளான அதுலத் முதலி, பிரேமதாசா**

**போன்ற அமைச்சர்களே என்பது அப்போதே வெளிப் படையா யிற்று. அக்கட்டத்தில் நடவடிக்கைகள் சரி எடுக்கப் பட்டிருக்கு மேயானால் விடுதலைப் புலிகள் இந்த அளவுக்கு எதிரிகளாக மாறியிருக்க மாட்டார்கள்."**

தினமணியே காரணத்தையும் சொல்லிவிட்டது. இலங்கை அரசில் ஒரு பிரிவு என்பது எவ்வளவு ஆபத்தான விஷயம். அது இந்த உடன்பாட்டைக் குலைத்ததும் அவர்களின் நடவடிக்கைதான். மேலும் விடுதலைப்புலிகளின் தளபதிகள் திலிபன், குமரப்பா, புலேந்திரன், ஜொனி உள்பட தளபதிகள் உயிரைத் தியாகம் செய்ய வேண்டிய நிலையும் இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற போரில் பல ஆயிர இந்திய அமைதிப் படை வீரர்களும் விடுதலைப்புலிகளும் அப்பாவி மக்களும் தங்களுடைய உயிர்களை இழக்கவும் நேர்ந்தது.

**"இராஜதந்திரம், பேச்சு வார்த்தைகளின் மூலம் அணுக வேண்டிய ஒரு பிரச்சனையை இராணுவ பலத்தைக் கொண்டு தீர்ப்பதற்கு இந்திய அரசு துணிந்தது. விடுதலைப் புலிகளின் பலத்தையும் ஈழத்தமிழர்களிடையே அவர்களுக்கிருந்த செல்வாக்கையும், இலங்கை அதிபர் செயவர்த்தனேவின் தந்திர வழிகளையும் இந்திய அரசு சரியாகக் கணிக்கத் தவறி விட்டது".**

இந்தத் தலையங்கத்திலேயே எவ்வளவு முரண்பாடுகள் பாருங்கள். முதலில் விடுதலைப்புலிகள் ஒப்பந்தத்தை மீறினர் என்று கூறியது. பின்வந்த வரிகளில் அதுலத்முதலி மற்றும் பிரேமதாசாவின் அரசியல் ஆட்டங்களையும் செயவர்த்தனேவின் தந்திரங்களையும் எடுத்துக் கூறியுள்ளது.

இங்கு இன்னொன்றையும் கவனிக்க வேண்டும்.

செப்டம்பர் 28,1987 தலையங்கத்தில் தளபதி திலிபன் நீர் கூட அருந்தாமல் உண்ணாநிலை இருந்து உயிர் தியாகம் செய்வதற்கு



பிரபாகரனின் மனிதாபிமானமற்ற சுயநல போக்கே காரணம் என்று கூறியது.

இந்திய அமைதிப்படை விடுதலைப்புலிகளுடன் போரிட்ட போது அக்டோபர் 19,1987 தலையங்கத்தில், வன்முறைப்பாதை என்றுமே வாழ்வைத் தந்ததில்லை. அழிவுக்குத்தான் கொண்டு செல்லும். ஒரு பிணக்காட்டில் தமிழீழம் என்ற இலட்சியத்தைத் தொலைத்து விட்டு நிற்கும் விடுதலைப்புலித் தலைவர் பிரபாகரன் இந்த உண்மையை இப்போது உணர்ந்திருப்பார் என்றெல்லாம் கூறியது.

***1988, மார்ச் 25, "பிரபாகரனைத் தேடி..."***

**"இந்திய அமைதிப்படை வீரர்கள் சல்லடைப் போட்டுத் தேடி யும் பிரபாகரன் ஒளிந்திருக்கும் இடத்தைக் கண்டு பிடிக்க முடிய வில்லை. இவ்வார முதலில் பிரபாகரனுடன் அரசியல் பேச்சு வார்த்தை தொடங்க முன்வருவதாகச் சொல்லி அவருடைய நம்பிக்கைக்குரிய தளபதிகள் இருவர் சென்னையிலிருந்து வவுனியா பகுதிக்கு இந்திய இராணுவ கெலிகாப்டரில் அழைத்துச் செல்லப்பட்டனர். இருவரில் ஜொனி என்பவர் பிரபாகரனுடன் தொடர்பு கொள்ளும் முன்பே துரதிருசுட வசமாகச் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டார்."**

இந்திய அரசின் தூதுவராக அனுப்பப்பட்டு இந்திய அமைதிப் படையால் கொல்லப்பட்ட ஜொனி தூதுவராக அனுப்பப்பட்ட சூழல் குறித்து ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ ஒரு கூட்டத்தில், 'அவர் தன் பாதுகாப்புக்கு ஆயுதம் கேட்டார். எந்த ஆயுதமும் வேண்டாம். நீங்கள் உங்கள் பெயரைச் சொல்லுங்கள். இந்திய இராணுவத்திற்கு உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. உங்களுக்கு எந்த இடைஞ்சலும் இருக்காது என்று சொன்னார்கள். அவர் நான்கு தினங்களாக இரவு பகலாக நடந்து பிரபாகரனைச் சந்தித்து விட்டு திரும்பினார். அவரோடு மூன்று புலிப்படை

இளைஞர்கள் வந்தார்கள். அவரை ஒரு இடத்திலே இந்திய இராணுவம் மறித்தது. உடனே இரண்டு கைகளையும் தூக்கிய வாறே சத்தம் போட்டுச் சொன்னார். 'நான் இந்திய அரசாங்கத் தால் அனுப்பட்டவன். என் பெயர் ஜானி'. உன் பெயரைச் சொன்னால் போதும் என்று சொல்லியிருந்தார்கள். அப்படி ஜானி தன் பெயரைச் சொன்னதற்குப் பிறகும் நிராயுதபாணியான அவரை உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை துப்பாக்கியால் சுட்டு சல்லடையாக்கினார்கள். உடன் வந்த மூவரை ஒன்றும் செய்ய வில்லை. அவர்கள் நான்கு நாட்கள் அங்கேயே இருந்து, காட்டுச் சுள்ளிகளை பொறுக்கிப் போட்டி ஜானியின் உடலைக் கொளுத்தி னார்கள்' என்று அந் நிகழ்வுகளைச் சொன்னார்.

ஆனால் தினமணி துரதிருசுடவசமாக கொல்லப்பட்டு விட்டார் என்று கூறுகிறது.

இதுதான் தினமணியின் நடுநிலைமை.



## துக்ளக்

கீழ்க்கண்ட செய்திகள் 1.11.87 தேதியிட்ட துக்ளக் இதழில் இந்திய இலங்கை உடன்பாடு தொடர்பாக வெளிவந்தவையாகும். நடுநிலை இதழ் என்று சொல்லிக் கொண்டே அவதூறுகளைப் பரப்பும் துக்ளக்–இன் பத்திரிக்கைத் தர்மத்தைப் பார்ப்போம்.

**"ஒன்றுமறியாத அப்பாவித் தமிழர்கள் இலங்கை இராணுவத் திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் பலியாகிக் கொண்டிருந்தார் கள். இந்த மாதிரி மரணங்கள் ஆயிரக்கணக்காக தமிழ்க் குடும் பங்களில் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருந்தன. இந்த பயங்கரமான சூழ்நிலை யிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, இலங்கைத் தமிழ் மக்கள் இந்தியாவிற்கும் வேறு பல நாடுகளுக் கும் அகதிகளாய்ப் போய் சேர்ந்த வண்ணம் இருந்தார்கள். இந்த துன்பத்தி லிருந்து இலங்கைத் தமிழ் மக்களை மீட்பதற்கு இந்தியா தான் ஏதாவது செய்ய முடியும் என்ற நிலையில், இந்திய அரசு இலங்கை அரசுடன் அந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது. இது மிகவும் சரியான செயலே."**

இலங்கை இந்தியா உடன்பாடு ஏற்பட்ட காலங்களில் இந்தியா விலும் பல மாநிலங்களிலும் சிக்கல்கள் இருந்தன. மேற்கு வங்கத் தில் டார்ஜிலிங் கோர்க்கர் சிக்கலில் தொடர்புடைய மக்களுடனும் பாதிக்கப்பட்டவர்களுடனும் நமது அரசு உடன்பாடு செய்து கொண்டது. பாலஸ்தீனிய மக்கள் பிரச்சனையில் இஸ்ரேலுடன் அவர்கள் (பி.எல்.ஓ) நேரடியாக உடன்பாடு செய்து கொண்டார் கள். இதில் அமெரிக்காவின் பங்கு என்னவெனில் உடன்பாட்டை நிறைவேற்றுவதில் உறுதியுடன் உதவி புரிதல். நமது இந்திய அரசும் சிங்கள அரசு மற்றும் புலிகளிடையே உடன்பாட்டை ஏற்படுத்தி, அவ்

வுடன்பாடு நிறைவேற்றப்படக்கூடிய வகையில் ஒரு காப்பாளனாக இருந்திருக்க வேண்டும்.

***ஃப்ரண்ட்லைன்*** என்ற ஆங்கில இதழில் *(ஏப்ரல் 1–14,1989)*, The delay in devolution என்ற தலைப்பில் பல செய்திகள் வந்துள்ளன. அதில் 1989 மார்ச் மாதம் 11 ஆம் தேதி, வடகிழக்கு மகாண முதல்வர் திரு. வரதராஜபெருமாள் தலைமையில் பத்மநாபா, சாந்தன் மற்றும் பிரேமசந்திரன் அடங்கிய குழு ஒன்று அதிகார பரவலாக் கத்தில் உள்ள குறைகளையும் தாமதத்தையும் எடுத்து பிரதமர் இராஜீவிடம் விளக்க டெல்லியில் தங்கியதாக கூறப்பட்டுள்ளது.

உடன்பாடு ஏற்பட்டு 20 மாதங்களுக்கு மேல் ஆகிய நிலையில் சிங்கள அரசு ஒப்பந்தத்தில் ஒரு சிறு பகுதியைக் கூட நிறைவேற்ற முயலவில்லை. மாறாக புலிகள் சார்பில் திலிபன் மறைவு, ஆயுத ஒப்படைப்பால் ஏற்பட்ட இழப்பு, ஜொனி மறைவு, புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட 12 பேர் மறைவு, மோதலில் பல புலிகளின் மரணங்கள் ஆகியவை ஏற்பட் டுள்ளன. இந்திய அரசு சார்பில் 2000 இந்திய இராணுவ வீரர்கள் மரணமடைந்துள்ளார்கள். பல ஆயிரம் கோடி ரூபாய் இந்திய அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

அந்த செய்தியில் திரு. சாந்தன் அவர்கள் பின் வருமாறு கூறியுள்ளார், 'அதிகார பரவலாக்கம் குறித்து இலங்கை அதிபர் பிரேமதாசாவிடம் பலமுறை வரதராஜபெருமாள் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். ஆனால் இலங்கை அரசு செயல்படும் விதம் எங்களை இலங்கை அரசின் மீது நம்பிக்கை இழக்கச் செய்கிறது. உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ள இரண்டு நாடு களில் ஒன்று என்ற முறையில் அதிகார பரவலாக்கம் குறித்த முழுமையான விவரங்களையும் அவற்றை விரைவில் நிறைவேற்று வதற்கும் இந்தியா முயல வேண்டும்'.

அதில் கீழ்க்கண்ட செய்திகளும் காணப்படுகின்றன.



1. இலங்கை அரசின் 13 வது அரசியல் சட்ட திருத்தம் மூலம் எந்த விதமான அதிகாரமும் தமிழீழ மக்களின் திருப்திக்கு ஏற்ப அமைய வில்லை. 2. 'சிவில் வாலண்டியர் போர்சு' என்ற பாதுகாப்பு படை ஏற்படுத்த இந்திய இலங்கை உடன்பாடு வழி ஏற்படுத்திய போதும் இலங்கை அரசு தாமதம் செய்தது. தேர்ந் தெடுக்கப்பட்டவர்களுக்கு ஆயுதமும் சம்பளமும் இலங்கை அரசால் கொடுக்கப்படவில்லை. 3. நிலத்தாவா சட்டம் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை மிக முக்கியமான ஒரு சட்டமாகும். ஆனால் இச்சட்டத்திலும் கல்வி மற்றும் பொதுப் பணிகளிலும் இலங்கை அரசு அதிகக் கட்டுப் பாடுகளை விதிக்கத் தொடங்கியது. 4. சிங்கள மக்களின் குடியேற்ற மும் நிறுத்தப்படவில்லை. 5. வடகிழக்கு புனரமைப்புக்காக பல வெளிநாடுகள் உதவிபுரிய உறுதியளித்தன. இலங்கை அரசின் பங்களிப்புடன் மொத்தம் இலங்கையின் நாணய மதிப்பில் 20,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் இலங்கை அரசோ 387 மில்லியன் ரூபாய் மட்டுமே உதவியாக அளித்தது.

எனவே இந்திய அரசு செயல் சரியானதுமல்ல. முறையானது மல்ல. உடன்பாட்டை நிறைவேற்ற இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வும் முடியவில்லை.

**"இலங்கை அரசுக்கும் தீவிரவாதிகள் உட்பட எல்லா தமிழ் பிரதிநிதிகளுக்கிடையே ஓர் உடன்பாடு உருவாவதற்கு இந்தியா பல முயற்சிகளை மேற்கொண்டது. இறுதிக் கட்டத்தில் ஜெயவர்த்தன கூட இதற்கு சம்மதித்து விட்டார். விடுதலைப் புலி களையும் அவர்களுடன் கூட்டாக இயங்கத் தொடங்கிய ஈராஸ் என்ற தீவிரவாத குழுவையும் தவிர மற்ற தீவிரவாத குழுக்கள் சம்மதித்தன"** –துக்ளக்.

1.3.89 துக்ளக் இதழ் கேள்விபதில் ஒன்றில்,

**கே: ஈழத் தமிழர் பகுதியில் தேர்தல் முடிவுகள் குறித்து..?**

**ப: 'ஓட்டளிக்கக் கூடாது' என்ற விடுதலைப்புலிகள் மிரட்டியும், ஓட்டளிக்க மக்கள் முன்வந்தனர் என்பது ஒரு நல்ல அறிகுறி. ஈராஸ் அமைப்புக்கு நல்ல வெற்றி கிட்டியிருப்பதும், அமிர்தலிங்கம் கட்சிக்குப் படுதோல்வி கிட்டியிருப்பதும், துன்ப காலத்தில் உழைத்தவர்களிடம் அம்மக்களுக்கு மரியாதை ஏற்பட்டிருப்பதற்குச் சான்று. ....இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்ற ஈராஸ், ஈ.பி.ஆர்.எல். எஃப். குழுக்களின் வெற்றிகளும்– இந்திய அரசின் இலங்கை முயற்சிக்குக் கிடைத்துள்ள நற் சான்றிதழ்கள்'** என்று சோ கூறியுள்ளார்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு சம்மதிக்காத விடுதலைப் புலிகளும் ஈராஸ் அமைப்பும் என்று 1.11.87 **துக்ளக்** இதழில் எழுதிய சோ, 1.3.89 இதழில் இந்திய இலங்கை உடன்பாட்டை ஏற்ற **ஈராஸ்** அமைப்பு என்று மாற்றியும், அமிர்தலிங்கத்திற்கு ஒரு இடம்தான் தருவதற்கு பிரபாகரன் சம்மதித்தார் என்று பிரபாகரன் மீது குற்றம் சாட்டிய சோ, இந்த பதிலில், துன்ப காலங்களில் உழைத்த வர்களிடம் அம்மக்களுக்கு மரியாதை ஏற்பட்டிருப்பதற்குச் சான்று என்றும் முன்னுக்குப்பின் முரணாகக் கூறியுள்ளார்.

1985–இல் திம்புவில் இரண்டு கட்ட பேச்சுவார்த்தைகள் நடை பெற்றன. இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தையின் போது 200– இக்கும் மேற்பட்ட தமிழர்களை இரண்டே நாட்களில் வவுனியா விலும் திரிகோணமலையிலும் வன்முறைகளைக் கட்டவிழ்த்துக் கொன்றது இலங்கை இராணுவம். இதைத் தொடர்ந்து அனைத்து விடுதலை இயக்கங்களும் பேச்சுவார்த்தையைப் புறக்கணித்தன. ஆனால் அவர்களை நிர்ப்பந்திக்கும் வகையில் விடுதலைப் புலிகளின் அமைப்பைச் சேர்ந்த திரு. பாலசிங்கம், டெலோ இயக்கத்தைச் சேர்ந்த சந்திரகாசன் மற்றும் சத்தியேந்திரா ஆகியோரை நாடு கடத்தி பின்னர் ஆணையைத் திரும்பப் பெற்றுக் கொண்டது நமது அரசு.



மேலும் 1957–இல் திரு. பண்டாரநாயகாவிற்கும் ஈழத்தந்தை செல்வநாயகத்திற்கும் இடையே ஏற்பட்ட உடன்பாட்டிலேயே வடக்கு–கிழக்கு மகாணங்களை வாக்கெடுப்பு இல்லாமலேயே இணைக்க வழிவகை செய்யப்பட்டது. நிலம், கல்வி, சமூக நலம் மற்றும் தொழில் துறைகளில் அதிக அதிகாரங்களை வழங்க வழி வகுக்கப்பட்டிருந்தது. ஆனால் புத்த சாமியார்களும் இந்திய இலங்கை உடன்பாடு ஏற்பட காரணகர்த்தாவாக இருந்ததாக துக்ளக்–ஆல் வர்ணிக்கப்படும் செயவர்த்தனேவின் கடும் எதிர்ப்பி னால் உடன்பாடு கிழித்து எறியப்பட்டது.

இந்திய இலங்கை உடன்பாட்டை ஏற்ற தமிழர் குழுக்கள் 1987 மார்ச், ஏப்ரல் மற்றும் மாதங்களில் இலங்கை இராணுவம் தமிழர் பகுதிகளின் மீது மிகப்பெரும் தாக்குதலைத் தொடங்கியபோது இந்தியாவில் இருந்தன. இந்த இயக்கங்கள் புலிகளுடன் இணைந்தோ அல்லது வவுனியா திரிகோண மலை, மட்டகிளப்பு பகுதிகளி லிருந்தோ இயங்கி தமிழீழ மக்களை இலங்கை இராணுவத்திட மிருந்து காப்பாற்றியிருக்கலாம். ஆனால் அவ்வியக்கங்கள் அவ்வாறு செய்யவில்லை. எனவே குறைபாடுகளையுடைய இவ் வுடன்பாட்டை அவர்கள் ஏற்றது இயல்பான ஒன்றே. இக் குழுக் களில் தலைமையான இயக்கமான இ.பி.ஆர்.எல்.எஃப். என்ற குழுவிடமே வடகிழக்கு நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு இந்திய அரசும் ஆதரவு அளித்தது.

அப்போதைய போரில் இலங்கை இராணுவம் யாழ்ப்பாணம் நோக்கி முன்னேறிக் கொண்டிருந்ததாக துக்ளக் கூறுகிறது. இதற்கு பிரண்ட்லைன் ஆகஸ்ட் 31, செப்டம்பர் 13, 1991 இதழில் அதிபர் செயவர்த்தனே பின்வருமாறு கூறியுள்ளார்;

'வடமராச்சி சண்டை முடிந்தவுடன் யாழ்ப்பாணத்தின் மீது போர்த்தொடுக்க ஆணையிட்டபோது, இராணுவ அதிகாரிகள், நாம் நினைத்ததைவிட அதிகஅளவிலான எண்ணிக்கையில்

வீரர்களை இழந்துள்ளோம். யாழ்ப்பாணம் மீது படையெடுக்க நாம் பலாலி முகாமிலிருந்து இலக்கு நிர்ணயிக்க வேண்டும். பாலாலியிலிருந்து யாழ்ப்பாணம் நகரம் வரை, கோட்டைப் பகுதியைத் தவிர, மற்றப் பகுதிகளைப் புலிகள் ஆக்கிரமித்து உள்ளனர். ஆகையால் கோட்டைப் பகுதி முகாமுக்கு உதவ விமானப் படை மூலம் உணவு வழங்க வேண்டும் என்று கூறினர். மேலும் வடமராச்சி போரில் ஒரு விமானத்தையும் சிங்கள இராணுவம் இழந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் விமானங்களை உபயோகப் படுத்துவது சிக்கலான ஒன்றாகும்' என்று கூறிய செயவர்த்தனே மேலும் அதே பேட்டியில் தொடர்கிறார்,

'இந்திய இராணுவம் இங்கு வந்திருக்காவிடில் புலிகள் இந்த போரில் வென்றிருப்பார்கள். நான் இந்தியப்படை இங்கு வந்த தற்கான காரணமாகக் கூறுவதற்கு இவைகளைத் தவிர வேறு ஒன்றுமில்லை.'

இவ்வளவு பகிங்கிரமாக இலங்கை அதிபரும் இராணுவ அதிகாரி களும் புலிகளுடன் ஏற்பட்ட தோல்விகளை ஒப்புக் கொண்ட பின்னும் துக்ளக் இலங்கை இராணுவத்திற்கு இன்றுவரை வக்காலத்து வாங்குகின்றது.

**"இலங்கைத் தமிழ் மக்களின் எல்லா கோரிக்கைகளும் இந்த ஒப்பந்தத்தின் மூலமாகப் பெற்றுத் தரப்பட்டு இருக்கின்றன. இதைத் தவிர திரிகோணமலை ஓர் அமெரிக்கத்தளமாக மாறுவதற்கு இருந்த வாய்ப்பும் இந்த ஒப்பந்தத்தின் மூலமாக தவிர்க்கப்பட்டுள்ளது"**– துக்ளக்.

தமிழீழ மக்களின் உயிர்ப்பிரச்சனை மொழி. 1956 இல் சிங்களமே ஆட்சிமொழி என இலங்கை அரசால் பிரகடனப் படுத்தப்பட்ட போது தான் இனப்பிரச்சனை ஏற்பட்டது. இது குறித்து தெளிவான கருத்து இந்திய இலங்கை உடன்பாட்டில் கூறப்படவில்லை. உடன்பாட்டில் 2.18 பிரிவில் The official language



of Srilanka shall singala. Tamil and English will also be official languages என்ற குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலேயே தமிழ் மொழிக்கு சம உரிமை அளிக்கப்படவில்லை என்பது தெரிகின்றது.

உடன்பாடு பிரிவு 2.3–இல் வடக்கு கிழக்கு மகாணங்கள் இணைப்பு தற்காலிகமானது. இது நீடிக்க கிழக்கு மகாணத்தில் மட்டும் வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று கூறப் பட்டுள்ளது.

மொழிக்குறித்தும் வடகிழக்கு இணைப்புக் குறித்தும் உடன் பாட்டின் பல உட்பிரிவுகள் குறித்தும் தினமணி நவம்பர் 2, 1987 இல் வெளிவந்த தலையங்கம் மிகவும் தெளிவாக விளக்குகிறது. துக்ளக் இதைப் படித்திருந்தால் நன்கு விளங்கி யிருக்கும்.

இந்த இணைப்புப் பற்றி திரு. செயவர்த்தனே அவர்கள் ஃபிரண்ட்லைன், ஆகஸ்ட் 31–செப்டம்பர் 13, 1991 இதழில், '1986 டிசம்பரில் முடிவு செய்யப்பட்டவைதான், இந்த உடன்பாட்டில் உள்ளன. ஒரே ஒரு அதிகப்படியான விஷயம் ஒன்று சேர்க்கப் பட வேண்டும். அதாவது வடக்கு கிழக்கு மகாணங்களை தற்காலிக மாக இணைப்பதற்கு தாங்கள் ஏற்றுக் கொள்ளுவீர்களா' என பிரதமர் இராஜீவ் கேட்டதாக செயவர்த்தனே கூறுகிறார். மேலும் அந்தப் பேட்டியில் 'கிழக்கு மகாணத்தில் வாக்கெடுப்புக்கு உட்பட்ட இணைப்பதால் நாங்கள் தயங்கவில்லை. ஏனெனில் சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களும் எதிர்த்து வாக்களிப்பார்கள். கிழக்கு மகாண தமிழர்கள் வடக்கு மகாணத் தமிழர்களிடமிருந்து வேறு பட்டவர்கள். எனவே வடக்கு கிழக்கு இணைப்பானது நீடிக்காது' எனக் கூறியுள்ளார்.

1957–இல் செல்வநாயகா–பண்டாரநாயக உடன்பாட்டில்கூட வடக்கு கிழக்கு மகாணங்கள் வாக்கெடுப்பு இல்லாமல் இணைக்கப் பட்டன. தமிழ் மொழிக்கு உரிய இடம் அளிக்கப் பட்டது.

*இவையெல்லாம் தெரிந்தும் துக்ளக் புலிகளின் மீதுள்ள காழ்ப் புணர்ச்சியினாலும் தமிழ் இனத்தின் மீதுள்ள வெறுப்பினாலும் தமிழ் இனப்படுகொலைக்கு ஆதரவாக எழுதி வருகிறது.*

**"இந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதனால் புத்த பிட்சுகள் ஜெயவர்த்தனவை கடுமையாக எதிர்க்கிறார்கள். சிங்கள மக்கள் கோப முற்று பெரிய அளவில் கலவரங்களை நடத்துகிறார்கள். இந்த ஒப்பந்தம் செய்து கொண்டதற்காக எதிர்க்கட்சிகளும் ஜெயவர்த்தனவை இலங்கையை இந்தியாவிற்கு விற்று விட்டார் என்று பழித்துக் கூறுகின்றன. ஜெயவர்த்தனே மிகச் சாமார்த்திய மாக நடந்து கொண்டு இராஜீவ் காந்தியை ஏமாற்றி, இந்த ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால் சிங்கள மக்களிடையே அவருக்கு மிகப் பெரிய பாராட்டுதானே கிடைத்திருக்கும்? இப்படி கடுமையான எதிர்ப்பா தோன்றியிருக்கும்?"–துக்ளக்.**

*துக்ளக் இந்தக் கூற்றிலிருந்தே ஓர் உண்மைப் புலப்படுகின்றது. ஈழத்தமிழர்களும், சிங்கள மக்களும் சேர்ந்து வாழ முடியாது என்பதற்கு துக்ளக்கின் மேற்கூறிய சொற்களே சான்று.*

*இரண்டாவதாக, 1987 நவம்பரில் நடந்த ஏழு மகாண கவுன்சில் தேர்தலில் செயவர்த்தனவின் கட்சிக்குக் கிடைத்த வெற்றிக்கு என்ன பொருள்? சிங்கள மக்கள் செயவர்த்தனே யின் செயல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இருந்தால் இந்த தேர்தகளில் தோல்வி அடைய செய்திருப்பர். இதிலிருந்தே இந்திய இலங்கை உடன்பாட்டில் ஈழத்தமிழர்களுக்கு பெரியதாக ஒன்றும் அளிக்கப்படவில்லை யென்பது தெரிகிறது. உண்மையில் சிங்கள மக்கள் அமைதியை விரும்பியிருந்தால், அப்போது சிங்கள தமிழீழ மக்கள் இணைந்து வாழ விரும்பிய நடிகர் குமரரண துங்காவின் அரசியல் கட்சியின் கூட்டணி யல்லவா வெற்றி பெற்றிருக்க வேண்டும்.*

**"இந்திய இராணுவம் தமிழர்களை எதிர்த்து சண்டையிடு கின்றது என்பதே பொய்யான பிரச்சாரம். விடுதலைப் புலி**



**களிடமிருந்து ஆயுதங்களை எடுத்துக் கொள்வதற்குத் தான் இந்திய இராணுவம் முயற்சி செய்கிறது...... விடுதலைப்புலிகள் மற்ற தீவிரவாத குழுவினரையும் அப்பாவி தமிழ் மக்களையும் சிங்கள மக்களையும் கொன்று தீர்ப்பதில் ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகும் முனைந்ததால் அவர்களிடமிருந்து ஆயுதங்களை உடனடி யாகப் பறிப்பது அமைதி காக்கும் படையின் கடமையாகிறது. ஆகையால் தான் இந்திய இராணுவம் ஆயுதங்களைப் பறிக்க முற்பட்டது. அப்போது விடுதலைபுலியினர் நமது படையினரைத் தாக்க ஆரம்பித்தார்கள்" – துக்ளக்.**

*சீனப் படையோ, பாகிஸ்தானியர் படையோ இந்திய இராணுவத் துடன் சண்டையிட்டால், அவர்கள் இந்தியா மீது, இந்தியர்கள் மீது படையெடுக்கவில்லை. நமது இராணுவ வீரர்களுடன்தான் சண்டையிடுகின்றனர் என துக்ளக் கூறுமா?*

*முதலில் இந்திய அமைதிப்படை இலங்கை செல்வதற்கான எந்த வழிவகையும் இந்திய இலங்கை உடன்பாட்டில் குறிப்பிடப் படவில்லை. இரண்டாவதாக உடன்பாட்டை அமுல்படுத்த உதவி புரியவே இந்திய அமைதிப்படை அனுப்பப்படுகிறது என்று கூறப் பட்டது. எனவே புலிகளுடன் ஆயுதங்களைப் பறிக்க சண்டையிட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது ஒரு கை கட்டிய நிலையில் சண்டையிட வேண்டிய நிலை இந்திய இராணுத்திற்கு ஏற்பட்டது என்றெல்லாம் கூறப்பட்டது.*

*இவையெல்லாம் பொய் என்பதும் புலிகளின் ஆயுதங்களைக் களைவதுதான் இந்திய இலங்கை உடன்பாட்டின் முக்கிய நோக்கம் என்பதை பிரதமர் இராஜீவ் இலங்கை அதிபர் செயவர்த்தனேவுக்கு அனுப்பிய ஒரு ஃபேக்ஸ் செய்தி அம்பலப்படுத்துகிறது. (ஃப்ரண்ட் லைன் ஆகஸ்ட்31–செப் 15).*

*உடன்பாட்டை நிறைவேற்ற எந்தக் கட்டத்திலும் இந்திய அரசு இலங்கையையும் மற்ற போராளிக்குழுக்களையும் நிர்ப்பந்திக்கவே*

இல்லை. மாறாக புலிகளைக் கட்டுப்படுத்தவே முனைந்தது.

உதாரணமாக 1987 ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் பிளாட் மற்றும் டெலோ இயக்கங்கள் புலிகளின் மீது இராக்கெட் தாக்குதல் நடத்தியது. நமது படை அவர்களின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.

**"பிரபாகரன் இந்திய இராணுவத்திடம் முழுமையாக ஆயுதங்களை ஒப்படைத்திருந்து, இந்த ஒப்பந்தம் நிறைவேறு வதைத் தடுக்காமல் இருந்திருந்தால், என்ன நடந்திருக்கக்கூடும் என்பதை யோசித்துப் பார்ப்போம். தமிழ்ப்பகுதிகளில் ஒரு அமைதி நிலவியிருக்கும். ஒப்பந்தம் ஏற்பட்ட உடனேயே பல தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப ஆரம்பித்தார்கள். முழு அமைதி ஏற்படுகின்ற சூழ்நிலை உருவாகி இருந்தால் மற்றவர்களும் இலங்கைக்கே திரும்பி இருப்பார்கள். புணருத்தாரண பணிகள் துவங்கப்பட்டிருக்கும். தமிழர்களின் இடைக்கால நிர்வாகம் பதவி ஏற்று இருக்கும். அதன் பிறகு சில மாதங்கள் கழித்து தேர்தல்கள் நடந்திருக்கும். இந்தியாவில் உள்ளது போல் மாநிலங்களுக்குள்ள அதிகாரங்களைப் பெற்று தமிழ் அமைச்சர்கள் நிர்வாகத்தை நடத்தும் ஒரு மாநிலம் அங்கே உருவாகி இருக்கும். தமிழும் ஆட்சி மொழியாகி இருக்கும்"–துக்ளக்.**

துக்ளக் படிப்பவர்களுக்கு ஒன்று தெளிவாகப்புரியும். எந்த ஒரு விஷயத்தையும் திட்டத்தையும் எதிர்மறையாகவும் கிண்டலாகவும் நக்கலாகவும் விமர்சனம் செய்து கேலி செய்து எழுதும் துக்ளக், இந்திய இலங்கை உடன்பாட்டுக்கு மட்டும் எப்போதும் ஆதரவான நிலையிலேயே எழுதி வருவதைக் கவனிக்க வேண்டும்.

மற்றவர்களைப் பற்றி, திட்டங்களைப் பற்றி விமர்சிப்பதை, கேலி செய்வதைப் பற்றி துக்ளக்– இடம் கேட்டால், அதன் ஆசிரியர் சோ, செயல்படுகின்றவர்களின் கடந்த கால செயல்பாட்டினால்தான் அவ்வாறு கேலி செய்வதாகக் கூறிவந்துள்ளார்.



அப்படியெனில், ஈழத்தமிழர்களுக்கு 1957–இல் பண்டார நாயகா–செல்வநாயகம் உடன்பாடு ஏற்பட்டபோது மிகப் பெரிய எதிர்ப்பை, ஊர்வலம் ஒன்றைக் கண்டியிலிருந்து கொழும்பு வரை நடத்தி சிங்கள மக்களிடம் தூண்டியவர் செயவர்த்தனே. அதனால் அப்போதைய சிங்கள அரசு அந்த உடன்பாட்டைக் கிழித்தெறிந்தது.

1960 ஏப்ரல், மே, சூன் மற்றும் சூலை மாதங்களில் தேர்தல் பிரச்சாரத்திற்காக திருமதி. பண்டாரநாயகா, தந்தை செல்வ நாயகத்தின் ஆதரவை நாடினார். தனது கணவர் திரு. பண்டார நாயகாவுடன் செய்து கொண்ட உடன்பாட்டை நிறைவேற்று வதற்காக உறுதியளிக்கிறார். ஆனால் தேர்தலில் திருமதி பண்டார நாயகா தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்ததால் தமிழர் களின் ஆதரவு தேவையில்லாத நிலையில் தந்தை செல்வநாயகத் திடம் தந்த உறுதி மொழியை உதாசீனப்படுத்துகிறார். மேலும் தமிழர்களுக்கெதிரான நடவடிக்கைகளை எடுக்கிறார்.

1965 மார்ச் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியும் ஈழத்தந்தை செல்வநாயகத்தின் ஃபெடரல் கட்சியும் தேர்தல் கூட்டணி அமைத்து வெற்றி பெற்றது. டட்லி சேனாநாயகாவின் மந்திரி சபையில் ஃபெடரல் கட்சிக்கும் இடம் அளிக்கப்பட்டது. இம்முறை மாவட்ட கவுன்சில்கள் அமைக்கவும் வடக்கும் கிழக்கும் தமிழர் பகுதிகளாக அங்கீகரிக்கப்படவும் தமிழ் மொழி சிங்கள மொழிக்கு இணையான ஆட்சி மொழியாகவும் அமைந்த உடன்பாடு செல்வநாயகம்–டட்லி சேனநாயகா இடையே ஏற்பட்டது. இவ்வுடன்பாடும் கிழித்தெறியப் பட்டது.

புலிகள் இந்த உடன்பாட்டை எதிர்த்தாலும் சிங்கள அரசு இந்த உடன்பாட்டை நிறைவேற்ற எந்த சிறு முயற்சியையும் எடுக்க வில்லை. வடக்கு கிழக்கு மகாணங்களில் தேர்தல் நடத்தப்பட்டது. இ.பி.ஆர்.எல்.எப்–இன் தலைவர் திரு. வரதராஜபெருமாள் தலைமையில் ஆட்சியும் அமைந்தது. ஆனால் வடகிழக்கு மகாணங்

களுக்குரிய அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படவில்லை. கிட்ட தட்ட 28 மாதங்கள் இந்திய அமைதிப்படை அங்கிருந்தும், பிரதமராக இராஜீவ் இருந்தும் வரதராஜபெருமாள் திரிகோண மலைக்கும் தில்லிக்கும் அலைந்தும் அதிகாரப் பரவலாக்கல் திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

ஈழத் தமிழர்கள் மீது நல்லெண்ணம் கொண்ட நாடுகள் வடகிழக்கு பகுதி புனரமைப்புக்காக நன்கொடைகள் அளித்த போதும் இலங்கை அரசின் ஈட்டுப் பங்களிப்புடன் மொத்த தொகை யாக இலங்கை மதிப்பில் ரூபாய் இருபதாயிரம் மில்லியன் சேர்ந்த போதும் இலங்கை அரசு 387 மில்லியன் ரூபாய் மட்டுமே அளித்த தாக வரதாராஜ பெருமாள் கூறியுள்ளார்.

இவையெல்லாம் துக்ளக் சோ அறிந்திருக்க நியாயமில்லை. தமிழர்களுக்கு எதிராக செயல்படுவதுதான் சோவுக்கு ஒரே எண்ணம்.

**"சிங்கள இராணுவம் அத்து மீறினால் அதை இந்திய இராணுவம் தடுத்திருக்கும். உடன்பாட்டை இலங்கை அரசு மீற முயன்று இருக்க முடியாது"–துக்ளக்**

உடன்பாடு ஏற்பட்ட ஒரு வார கால இடைவெளியில் ஈராஸ் குழுவின் போராளிகள் இருவர் சிங்கள இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டனர். மட்டகிளப்பில் தமிழர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்திய அமைதிப்படை தளபதி **தீபிந்தர் சிங்** தான் எழுதிய **இலங்கையில் இந்திய அமைதிப்படை** என்னும் நூலில் 81 ஆம் பக்கம் முதல் 86 ஆம் பக்கம்வரை அவர் எழுதியுள்ள விவரங்களை திரு.பழ.நெடுமாறன் அவர்கள் பின்வருமாறு தொகுக்கிறார்.

'1987 ஆம் ஆண்டு அக்டோபர் 3 ஆம் நாள் விடுதலைப் புலிகள் 17 பேர்களைக் கொண்ட படகை சிங்களக் கடற்படை



பிடித்தது. இவர்களுள் புலேந்திரன், குமரப்பா போன்ற முக்கிய புலித்தளபதிகள் இருந்தனர். பொதுமன்னிப்பு அளிக்கப்பட்ட பின்பு இவ்வாறு கைது செய்வது தவறு என விடுதலை புலிகள் இயக்கம் கண்டனம் தெரிவித்தது. ஆனால் அதை ஏற்க இலங்கை அரசு மறுத்துவிட்டது. கைது செய்யப்பட்டவர்களைக் கொழும்பு கொண்டு செல்ல முயன்றது. நிலைமை முற்றுவதைக் கண்ட நான், கொழும்பு நகருக்கு விமானத்தில் பறந்து சென்று ஜெனரல் ரனதுங்கே மற்றும் செயவர்த்தனே ஆகியோரைச் சந்தித்துப் பேசினேன். கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கும்படிக் கோரினேன். எனது அறிவுரைக்கு செவி சாய்க்கவில்லை'

'அக்டோபர் 5 ஆம் நாளன்று கைது செய்யப்பட்டவர்களை விமானத்தில் ஏற்றிக் கொழும்பு கொண்டு செல்ல சிங்களப்படை முயன்ற போது 12 புலிகள் சயனைட் அருந்தி உயிர்த்தியாகம் செய்தனர். விளைவு விபரீதமாயிற்று. அக்டோபர் 6 ஆம் நாள் இந்தியப் படை தளபதி ஜெனரல் சுந்தர்ஜி யாழ்ப்பாணத்திற்கு தீர்மானமான ஒரு முடிவோடு வந்தார். அவரிடம் என் கருத்தை வெளியிட்டேன். 'புலிகளுடன் போர் தொடுத்தல் கூடாது. அப்படிப் போர் தொடுத்தால் 20 ஆண்டுகளுக்கு மேலாக அப்போர் நீடிக்கும்' என்று எச்சரிக்கை செய்தேன். அதன்பின் சுந்தர்ஜி கொழும்பு சென்றார். இந்திய பாதுகாப்பு அமைச்சர் கே.சி. பந்த்துடன் செயவர்த்தனேவை சந்தித்தார்' என எழுதி யுள்ளார். இலங்கை எவ்வாறு உடன்பாட்டை மீறியது என்பதற்கு இது சான்றாகும்.

இவ்வளவு அத்துமீறல்களையும் இலங்கை அரசும் இராணுவமும் செய்துள்ளதை துக்ளக் இல்லையென்றா கூறுகின்றது?

**"இந்திய இராணுவம் இலங்கைக்குச் சென்ற உடனேயே அவர்களுக்கு மிகப்பெரிய உற்சாகமான வரவேற்பு எல்லா இடங்களிலும் மக்களால் அளிக்கப்பட்டது. பிரபாகரன் ஒரு**

**பொதுக் கூட்டத்தைக் கூட்டினார். இந்த ஒப்பந்தத்தைப் பற்றியும் சந்தேகப்பட்டு அவர் பேசிய போதெல்லாம் மக்கள் மவுனமாக இருந்தனர். இந்த ஒப்பந்தத்தை ஏற்பதாக அவர் கூறிய போது, கூட்டத்தினர் ஆராவாரம் செய்து அதை வரவேற்றார்கள். இந்திய இராணுவத்திடம் தனது ஆயுதங்களை எல்லாம் ஒப்படைத்து விடப் போவதாக அவர் கூறிய போதுதான் அந்த மக்களிடையே மிகப்பெரிய உற்சாகமான ஆராவராம் எழுந்தது" துக்ளக்.**

'பிரபாகரன் ஒரு கூட்டத்தைக் கூட்டினார்' என்று பொத்தாம் பொதுவாக கூறுவதாக நினைத்துக்கொண்டு அக்கூட்டத்திற்கு சோவே தன்னையும் அறியாமல் முக்கியத்து வத்தை வெளிப்படுத்தி விட்டார். இவ்வாறெல்லாம் கூறி, விடுதலைப்புலிகளுக்கு ஈழ மக்கள் எதிரானவர்களாக முயலுகின்றது.

ஈழப்பகுதியில் அமைதி நிலவுவதற்காக ஈழ மக்களுக்கு உரிய உரிமைகள் கிடைத்திட, எதற்காக ஈழமக்கள் கடந்த 40 ஆண்டு காலமாக போராடினார்களோ, அதை இந்தியாவே ஓர் உடன் பாட்டின் மூலம் கிடைத்திட வழிவகை செய்கின்றது என்கிற போது இந்தியாவிற்கு மிகப் பெரிய வரவேற்பை ஈழ மக்கள் அளித்தார்கள் என்பது இயல்பான ஒன்று.

மேலும் ஈழ மக்களுக்கு சிங்கள அரசால் நெருக்கடி நேர்ந்த போதெல்லாம் இந்தியா உதவிவந்துள்ளது. இந்த உடன்பாடு ஏற்படு வதற்கு முன்பு கூட உச்சகட்டப் போரில் யாழ்ப்பாண மக்கள் உயிருக்குப் பயந்து ஒளிந்த போது இந்திய அரசு தலையிட்டு விமானங்கள் மூலம் உணவு பொட்லங்கள் வழங்கி உதவி புரிந்தது. எனவே ஈழ மக்கள் இந்திய அமைதிப் படைக்கு ஆதரவாக இருந்தது என்பது இயல்பானது.

மேலும் ஆயுத ஒப்படைப்பு என்பது மிக முக்கியமான, ஈழ மக்களின் போராட்டங்களின் வடிவங்களில் ஒன்றாகும். இதன் மூலம் ஈழமக்களின் அமைதியான வாழ்க்கைக்கும் உரிமைக்கும்



உத்திரவாதத்துடனான தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு.

இது போன்ற ஒரு நிகழ்ச்சி 1965–இல் இலங்கையில் நடைபெற்றது. அப்போது நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 66 இடங் களையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டணி 55 இடங்களையும், தமிழரசு மற்றும் தமிழ்க் காங்கிரஸ் 17 இடங்களையும் பெற்ற நிலை யில் அறுதிப்பெரும்பான்மை பெற இரு சிங்களக்கட்சிகளும் தமிழர்களின் உதவியை நாடின.

இறுதியில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கம் ஏற்பட்டு டட்லி– செல்வா உடன்பாடும் ஏற்பட்டது. இந்த உடன்பாட்டை நிறைவேற்ற வும் சிங்கள தமிழ் மக்களின் பிரச்சனையை இணக்கமான ஒரு முடிவுக்குக் கொண்டு வரவும் 10 பேர் கொண்ட ஓர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. இதில் திரு. தந்தை செல்வநாயகம், திரு. பொன்னம்பலம், திரு. தொண்டைமான் மற்றும் திரு.செயவர்த் தனே ஆகியோர் இருந்தனர். இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தங்களது நல்லெண்ணத்தை வெளிப்படுத்த தமிழீழம் முழுவதும் பிரதமர் டட்லி மற்றும் ஜெயவர்த்தனே உட்பட சக அமைச்சர் களுக்கு பிரமாண்டமான வரவேற்புகள் கொடுத்து பிரச்சாரக் கூட்டங்களை நடத்தினர்.

எனவே அமைதியை ஈழ மக்கள் விரும்பிய நிலையில், ஏதாவது ஒரு வகையில் போர் நிறுத்தம் ஏற்பட்டு உடன்பாடும் ஏற்பட்டு உரிமைகள் கிடைத்து விடாதா என ஏங்குகின்ற மனநிலையில், அவர்கள் வரவேற்பு அளிப்பது நடைமுறையில் இயல்பான ஒன்றாகும்.

**"தனி ஈழம் அமைந்து, அதில் தன்னுடைய ஆட்சியே நடக்க வேண்டும் என்பதை பிரபாகரன் மிகவும் பட்டவர்த்தனமாகவே எடுத்துக் கூறினார். ஜனநாயகத் தேர்தல் முறையிலும் ஜனநாயகத்திலும் கூட தனக்கு நம்பிக்கைக் கிடையாது என்பதை அடித்துச் சொன்னார். ஒரு கட்சி ஆட்சி முறைதான் இருக்கும்.**

**ஆட்சி செலுத்துவது தன் கட்சியாகத் தான் இருக்கும் என்பதையும் சொன்னார்..... பல முறை நடந்த பேச்சு வார்த்தைகளில், மற்ற தீவிரவாதக் குழுக்களுக்கு அங்கீகாரம் கிடைத்து விடக்கூடாது என்பதில் பிரபாகரன் மிகவும் அக்கறை காட்டினார். நன்றாக யோசித்துப் பாருங்கள், ஒரு முறைக் கூட பிரபாகரன் தப்பித் தவறி இலங்கைத் தமிழர்கள் யாரை விரும்புகிறார்களோ அவர்களைத் தேர்ந்தெடுத்து ஆட்சியமைத்துக் கொள்ளட்டும் என்று கூறியதே கிடையாது. ஏனென்றால் அவரது எண்ணம் அதுவல்ல."–துக்ளக்.**

1984 மற்றும் 1985 ஆம் ஆண்டுகளில் திரு. சபாரத்தினம் தலைமையிலான தமிழீழ விடுதலை அமைப்புடனும் (டெலோ) திரு. பத்மநாபா தலைமையிலான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடனும் (இ.பி.ஆர்.எல்.எப்), திரு. பாலக்குமார் தலைமையிலான ஈழ புரட்சிகர மாணவர் அமைப்புடனும் (ஈராஸ்) இணைந்து பிரபாகரன் செயல்பட்டார். மேலும் இந்திய அரசு மேற்பார்வையில் திம்புவில் நடைபெற்ற பேச்சு வார்த்தை களில் இவர்கள் அனைவரும் இணைந்து செயல்பட்டனர். பிறகு இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலையைப் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டி ருக்கும் போதே கண்டித்து திரு. பாலசிங்கம், திரு. சந்திரஹாசன் மற்றும் திரு. சத்தியேந்திரன் ஆகியோர் இந்திய அரசிடம் முறையிட்டபோது அவர்கள் மூவரும் நாடு கடத்தப் பட்டனர். பின்னர் இந்திய அரசு தனது நாடு கடத்தல் ஆணையைத் திரும்பப்பெற்றுவிட்டது. இதன்பின் இந்தக் கூட்டணி இந்திய உளவுத்துறையினரால் உடைக்கப்பட்டது.

துக்ளக் கூறுவது போல் புலிகளுக்கு ஆதரவு இல்லையெனில், புலிகளின் செயல்பாடுகளைப் பற்றி ஏன் கவலைக் கொள்ள வேண்டும்? மேலும் ஜனநாயக முறையில் அக்கறை உள்ள துக்ளக் ஈழமக்களிடம் புலிகளின் கெட்ட எண்ணங்களையும் செயல்பாடு களையும் பிரச்சாரம் செய்யட்டுமே.



திம்பு பேச்சுவார்த்தைக்குப் பின்தான் புலிகளின் செல்வாக்கை இந்திய அரசு உணர்ந்தது மட்டுமல்லாமல், புலிகளின் பங்களிப்பு இல்லாமல் எந்த ஓர் உடன்பாடும் சாத்தியமில்லை என்பதையும் புரிந்து கொண்டது.

இந்தியா இலங்கை உடன்பாடு ஏற்பட்ட போது விடுதலைப் புலிகளைத் தவிர அனைத்துப் போராளிக் குழுக்களும் இவ் உடன்பாட்டை ஆதரித்த போதும், இந்திய அரசு புலிகளின் ஆதரவைப் பெறுவதில் முனைப்புக் காட்டியது.

இப்போது ஈழத்தில் எந்த ஓர் இயக்கமும் செயல்படவில்லை என்பதும் சிங்கள அரசு இப்போது புலிகளுடன் மோதி வருகின் றனர் என்பதும் உலகமறிந்த ஒன்றாயிற்று.

மாறாக திரு. வரதராஜ பெருமாள் தலைமையில் வடக்கு கிழக்கு மகாணத்தில் ஒரு தேர்தலை நடத்தி, அரசு அமைக்க இந்திய அரசு முயன்றது. மக்கள் அவர்களை ஏற்கவில்லை என்பது முடிவில் தெளிவாயிற்று, தேர்தலில் வெற்றிப் பெற்றதாக அறிவிக்கப்பட்ட போதும், அந்த அரசு அமைந்த போதும் செயல்படாமல் போயிற்று.

வியட்நாம் யுத்தத்தின் போது அமெரிக்க அரசு திரு. பாவோ டோய் என்பவரின் தலைமையில் பொம்மை அரசை அமைத்து கம்யூனிசப் போராளிகளை அழிக்கப்பார்த்தது. இதே நடை முறையைதான் இந்திய அரசும் கடைப்பிடித்தது. இது வரலாறு.

**"இந்திய அமைதிக்காக்கும் படையினர், இவர்களை நன்றாக சூழ்ந்து கொண்டு, இவர்கள் வெளியேற முடியாத நிலையில், இவர் ஓர் அற்புதமான அறிக்கை வெளியிட்டார். யாழ்ப்பான மக்கள் தப்பித்துக் கொள்ள, யாழ்ப்பாணத்தை விட்டு செல்வ தற்கு இனிமேல் நாங்கள் அனுமதிக்கிறோம். எப்படி? இவர் இனி மேல் அனுமதி அளிக்கிறார். இதுவரை அவர் யாழ்ப்பான மக்களை அனுமதிக்க விரும்பவில்லை. தமிழ் மக்களின் உயிர் மீது**

**அவ்வளவு அக்கறை"–துக்ளக்.**

ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் போராடும் போது தன் மக்களைப் பார்த்து, மக்களே இந்தப் போரிலிருந்து நீங்கள் தப்பித்து வேறு நாடுகளுக்கு சென்று விடுங்கள் என்று சொல்லுவதும் இல்லை. மக்கள் அவ்வாறு செல்லுவதுமில்லை. ஆனால் போர் உச்சகட்ட நிலைமையை அடையும்போது, பாதுகாப்பான இடங்களை நோக்கி, செஞ்சிலுவை சங்க பாதுகாப்பில் உள்ள பகுதிகளை நோக்கி செல்லுமாறு மக்களை வேண்டுவது அரசின் இயற்கையான செயல்பாடாகும்.

இதைதான் புலிகள் செய்தனர். ஆனால் சோ வக்கிரமான எண்ணத்துடன் எழுதுகிறார்.

டிசம்பர் 1995–இல் சிங்கள இராணுவத்துடன் நடைபெற்ற போரில் புலிகள் பின்தங்க வேண்டிய நிலை ஏற்பட்டபோது இரண்டு இலட்சம் யாழ்ப்பான மக்கள் புலிகளுடன் காட்டுப் பகுதிக்குள் சென்றனர். வெறும் மயானப்பகுதியை சிங்கள இராணுவம் பிடித்தது.

**"தங்கள் வசம் இருக்கும் ஆயுதங்களை இந்திய இராணுவத்திடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்பது ஒப்பந்தத்தின் முக்கிய ஷரத்துகளில் ஒன்று. பிரபாகரன் இதை செய்யாதது மட்டுமல்ல, புதிதாக ஆயுதங்களைப் பெறவும் முயற்சி செய்தார். அதற்காகத் தான் அவருடைய விடுதலைப்புலிகள் குழுவைச் சேர்ந்த 17 பேர் படகுகளில் சென்று அங்கே சமூத்திரத்தில் நின்று கொண்டிருந்த ஒரு கப்பலிருந்து ஆயுதங்களைப் பெறுவதற்காக முயற்சி செய்தனர். அப்படி அவர்கள் முயற்சி செய்த போதுதான் ஒப்பந்த விரோத செயலுக்காக கைது செய்யப்பட்டனர்"–துக்ளக்.**

இங்கு துக்ளக் வரிகளைக் கவனிக்க வேண்டும். விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கடத்தி வந்ததற்காகக் கைது செய்யப் படவில்லை. அவற்றைப் பெற முயற்சித்த போதுதான் கைது



செய்யப்பட்டனர் என்கிறது துக்ளக்.

சென்னையிலுள்ள தங்கள் அலுவலகங்களிலிருந்த ஆவணங்களை எடுத்துவர இவர்கள் இந்திய அமைதிப்படையினரிடம் தகவலை முறைப்படி தெரிவித்த பின்னர் சென்னை வந்தனர். பொது மன்னிப்பு அளிக்கப்பட்டபின் இவ்வாறு அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை. எனினும் முறைப்படித் தெரிவிக்க, இந்திய அமைதிப்படை அதிகாரிகள் இலங்கைக்கான தூதர் தீட்சித்–இடம் தெரிவிக்க, தீட்சித், அதுலத் முதலி ஆகியோர் சதித்திட்டம் தீட்டி அவர்களைக் கைது செய்தனர். பலாலி இராணுவ முகாமில் அவர்கள் சிறைவைக்கப்பட்ட போது பிரபாகரன் இந்திய அமைதிப் படை அதிகாரிகளிடம் அவர்களை விடுவிக்க முறையிட்டார்.

இந் நிகழ்ச்சிக் குறித்து, ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும் போது '17 விடுதலைப் புலித் தளபதிகள் கப்பலிலே வந்த போது இலங்கைக் கடற்படை அவர்களைக் கைது செய்தது. புலேந்திரன் மற்றும் 16 பேரும் முக்கிய தளபதிகள். இவர்களைக் கைது செய்த விபரத்தை இலங்கைக் கடற்படை இந்திய இராணுவத்திற்கு தெரிவித்தது. இந்திய இராணுவத் தளபதி பிரார் உத்தரவின் பேரில் இந்த 17 தளபதிகளும் வைக்கப் பட்டிருந்த இடத்திச் சுற்றி இந்திய இராணுவம் கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. இந்த 17 புலித் தளபதிகளுக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் உங்களை நிர்மூலம் ஆக்கி விடுவோம் என்று இந்திய இராணுவத் தளபதி இலங்கை இராணுவத்தை எச்சரித்தார். இந்த சம்பவம் நடந்தது அக்டோபர் 3–ஆம் தேதி. அதன் பிறகு 4–ஆம் தேதி பிரபாகரன் இவர்களை உடனடியாக விடுவிக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். இந்திய அரசு சொல்லும் ஆளை வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாகக் குழுவின் தலைவராக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று பிரபாகரனை நிர்ப்பந்திக்க இந்திய அரசாங்கத்திற்கு யோசனை சொல்லப்பட்டது. 17 தளபதிகள் முக்கியமானவர்கள். இவர்களை

இலங்கை இராணுவத்திடம் ஒப்படைத்து விடுங்கள். பிரபாகரன் கையெழுத்து இட வருவார் என்று சொன்னார்கள். 5 ஆம் தேதி காலை 11 மணிக்கு இந்திய இராணுவத்திற்கு ஒரு அதிர்ச்சி தரும் தகவல் வந்தது. உங்கள் கட்டுக் காவலை நீங்கள் விடுவித்துக் கொள்ளுங்கள் என்று. அதன்படி இந்திய இராணுவம் காவலை விலக்கிக் கொண்டது. இலங்கை இராணுவம் 17 பேரை நெருங்கியது. சயனைட் குப்பிகளைக் கடித்து 12 பேர் அந்த இடத்திலேயே இறந்து போனார்கள்' என்று 12 பேர் தற்கொலைச் செய்து கொண்ட சோக நிகழ்வை வைகோ விவரித்துள்ளார்.

நடுக்கடலிருந்து ஆயுதங்களை இது போன்ற அமைப்புகளுக்கு அளிக்கும் கப்பல் பொது கடற்பரப்பில் நின்றுதான் தனது களப் பணிகளை செய்யும். அவ்வாறு பொது கடற்பரப்பில் நின்ற கப்பலில் ஆயுதங்களைப் பெற புலிகள் முயன்றனர் எனில், பொது கடற்பரப்பில் நின்றவர்களைக் கைது செய்ய சிங்கள இராணுவத் திற்கு உரிமையில்லை.

இதே போன்ற நிகழ்ச்சி இரண்டு முறை நம் நாட்டில் நமது கடற் படையால் நடத்தப்பட்டுள்ளது. முதலாவது 1991 நவம்பர் 8 ஆம் தேதி தாய்லாந்து நாட்டிலிருந்து எராளமான ஆயுதங்களைக் கடத்தி வந்த தமிழகக் கடற்பகுதிகளில் மறைத்து வைக்கப் புலிகள் 'டோங்னோவா' என்ற கப்பலில் வந்தனர் எனக் கூறி நமது கடற் படை கைது செய்தனர்.

இது தொடர்பான வழக்கில் நான்கு ஆண்டுகள் கழித்து, நீதிபதி குருசாமி அவர்கள், புலிகள் ஆயுதங்களைக் கடத்தி வரவில்லை யெனவும் இந்திய கடல் எல்லையில் அவர்கள் வரவில்லையெனவும் கூறி விடுதலை செய்தார்.

1993 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் 'எம்.வி.அகத்' என்ற கப்பல் உணவு மற்றும் மருந்து பொருட்களை கிட்டு தலைமையில் வந்த போது இந்திய கடற்படையால் பிடிக்கப்பட்ட போது, கிட்டு



உட்பட 10 போராளிகள் அந்த கப்பலை முழ்கடித்து தாமும் தற்கொலை செய்து கொண்டனர் எனவும் மற்றும் 9 பேர்களும் அக்கப்பலும் மத்திய அரசால் பிடிக்கப்பட்டு 'தடா'வில் வழக்குப் பதிவு செய்து சிறை வைத்தனர். இரண்டு ஆண்டுகள் நடைபெற்ற அவ் வழக்கில் 29.6.96 இல் அன்று 'தடா' நீதிமன்ற நீதிபதி திரு. இலட்சுமண ரெட்டி அவர்கள் 80 பக்கத் தீர்ப்பில் 'இந்திய அரசால் சுமத்தப்பட்ட எந்தக் குற்றச்சாட்டும் சந்தேகத்திற்கு அப்பால் நிருபிக்கப்படவே இல்லை' என்று கூறியுள்ளார். மேலும் அத் தீர்ப்பில், 'இந்திய கடல் எல்லையிலிருந்து 440 கடல் மைல்களில் பயணம் செய்த அவர்களது கப்பலை இடைமறித்து அழைத்து வர இந்திய கடற்படைக்கு எந்த உரிமையும், அதிகாரமும் கிடையாது... அந்தக் கப்பல், சர்வதேச சட்டப்படி, ஒரு மிதக்கும் தீவு ஆகும். தென் அமெரிக்கக் கண்டத்து நாடான ஹாண்டுராஸ் என்ற நாட்டில் பதிவு செய்யப்பட்ட ஒரு கப்பல் என்று அதில் பணிபுரிந்து ஓட்டி வந்த அதன் பணியாளர்கள் பிரகடனப்படுத்தியுள்ளனர்.... எம்.வி. அகத் கப்பலில் ஆயுதங்கள் இருந்தன என்று கூறப்பட்டபோதிலும் கூட, இந்திய சட்டப்படி நம் கடல் எல்லைக்கு அப்பால் அது அவற்றை ஏற்றிச் சென்றது இந்திய சட்டப்படி எந்தக் குற்றமும் ஆகாது! இந்திய சட்டப்படி மட்டுமல்ல சர்வதேச கடற் கொள்ளைச் சட்டபடியும் அது குற்றம் என்பதன் கீழ் வரவே வராது' என்று கூறியுள்ளனர். எனவே துக்ளக் –சோவின் வாதங்கள் சொத்தை யானவை.

**"இலங்கை இராணுவத்துடன் சிக்கிய உடனேயே விடுதலைப் புலிகள் விஷம் சாப்பிட்டு இறந்து விடுவார்கள் என்று சொல்லப் படுவது பொய் பிரச்சாரம். இந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கு சுமார் ஒருவார காலத்திற்கு முன்பாகக் கூட பிரபாகரன் ஓர் அறிக்கை யில் எங்கள் இயக்கத்தினர் எங்கள் விடுதலைப்புலிகள் 30 பேர் இலங்கை இராணுவத்திடம் சிக்கியிருக்கிறார்கள். அவர்களை உடனே விடுதலை செய்ய வேண்டும் என்று கோரியிருக்கிறார். அந்த 30 பேர் ஏன் சைனைட் சாப்பிட்டு இறக்கவில்லை"** –துக்ளக்

இலங்கை இராணுவம் இவர்கள் புலிகள் என்று நிச்சயமாகத் தெரிந்து தமிழ் இளைஞர்களை கைது செய்வது இல்லை. எனவே தங்களை அடையாளம் கண்டு கொள்ளாத நிலையில் புலிகள் தற்கொலை செய்து கொள்வதில்லை.

திரு. மேஜர் அருணா என்ற விடுதலைப்புலித் தளபதி சிங்கள இராணுவத்துடன் ஏற்பட்ட சண்டையில் தனது முகம் உருமாறிப் போனதைச் சாதகமாக வைத்து தன்னை ஒரு படகோட்டி என்று கூறி இலங்கை இராணுவத்தின் சித்தரவதைகளிலிருந்து தப்பிய தோடு மட்டுமல்லாமல் தான் உயிருடன் இருப்பதைப் புலித் தலைவருக்கு தகவல் அனுப்புகிறார். உடனே புலிகள் தங்களிடம் இருந்த சிங்கள இராணுவ வீரர்களை விடுதலை செய்வதாகக் கூறி கைதிகள் பரிமாற்றம் என்ற நாடகம் நடத்தி அருணாவை மீட்டனர். இது உலகமறிந்த அதிசய நிகழ்வாகும்.

தற்கொலைப்படை என்பதை வைத்துள்ள இயக்கங்களில் புலிகள் அமைப்பு முதலாவதாக உள்ளது. **மில்லர்** என்ற கரும் படைப் புலி **நெல்லியடி** இராணுவ முகாமை வெடிகுண்டுகள் கொண்ட லாரியுடன் மோதிப் பலத்தச் சேதத்தை ஏற்படுத்தி தானும் மாண்டு போனார்.

இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானிய தற்கொலைப் படை வீரர்கள் பிரிட்சு போர்க்கப்பல்கள் இரண்டைத் தகர்த்த போது, அப்போதைய பிரிட்சு பிரதமர் சர்ச்சில் அந்த இரண்டு வீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தினார் என்பது வரலாறு.

அந்த நாட்களில் 4.9.85 ஜுனியர் விகடன் இதழில் விடுதலைப் புலிகள் ஆலோசகர் பாலசிங்கம் பற்றிய கட்டுரை ஒன்றில், "இவருடைய தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டும் தாக்குதலில் உயிரோடு இலங்கை இராணுவத்திடம் சிக்கிக் கொண்டதில்லை. பிணமாகவோ அல்லது பிடிபட்டவுடன் சயனைட்டை முழுங்கி உயிரை விடுவார்கள். இது பாலசிங்கம் புலிகளுக்குக் கற்றுக்



கொடுக்கும் அரிச்சுவடி போர் முறையாகும்" என்றும்,

21.5.86 ஜுனியர் விகடன் இதழில், "பிரபாகரனின் விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கொரில்லா யுத்தத்தில் ஈடுபடும்போது, ஒரு கால் சிங்கள இராணுவத்திடம் சிக்கிக் கொண்டாலும் ஒரு சிறு தகவலைக் கூட அவர்களிடமிருந்து கறந்து விட முடியாது. காரணம் ஒவ்வொரு வீரரும் தன் கூடவே கொடிய விசமான சயனைட் நிரப்பப்பட்ட சிறு குப்பி ஒன்றை வைத்திருக் கின்றனர். <u>தப்ப முடியாத, நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டால்</u> உடனே அந்த விஷத்தை விழுங்கி, உயிர் தியாகம் செய்து விடுகின் றார்கள்" என்று எழுதியது. இப்போது தற்கொலைப்படை வைத்து பல போர்த் திறமைகளை விடுதலைப்புலிகள் இயக்கம் காட்டி யுள்ளது.

**"இறுதிக்கட்டத்தில் இலங்கை இராணுவம் யாழ்ப் பாணத்தில் முன்னேற ஆரம்பித்துவிட்டது. விடுதலைப் புலிகள் இராணுவத் தின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியாமல் திணறினார்கள். யாழ்ப்பாண மக்கள் பெரும் துன்பத்திற்கு உள்ளானார்கள்" – துக்ளக்.**

'இந்திய இராணுவம் இங்கு வருவதைப் பற்றி நேரடியாக குறிப்பிடப்படாவிட்டாலும், இலங்கை பிரதமர் வேண்டுகோள் விடுப்பாரின், இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்படும் எனக் குறிப்பிடப்பட்டது. உடன்பாடு என்பது அரசியல் ஆவண மாகும். இதனுடைய விவரங்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவிக்கப் பட்டு அவை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். இவை நிறைவேற்றப்பட்டு பத்திரிக்கைகளுக்கு அளிக்கப்பட்டன. இவையெல்லாம் பிரேமதாசாவின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டன. அதற்கு சிங்கள மக்களும் வாக்களித்துள்ளனர். ஆனால் இந்திய இராணுவம் இங்கு வந்தது ஒரு இராணுவ இராஜ தந்திரம். இராணுவ விஷயங்களில் ஜனாதிபதி யாருடைய ஒத்து

ழைப்பையும் ஆதரவையும் பெறாமல் அழைக்கலாம். அந்த வகையில் நான் அவர்களை (இந்திய அமைதிப்படையை) அழைத்தேன். குவைத் போரின் போது அமெரிக்க அதிபர் புஸ் அமெரிக்க பாராளுமன்றத்தில் அனுமதி கேட்கவில்லை. இங்கிலாந்தில் ஜான் மேஜரும் அனுமதியைப் பெறவில்லை.'

'1914 மற்றும் 1939 உலக யுத்தங்களின் போது ஜெர்மானிய படைகளின் தாக்குதல் பற்றி நடு இரவில் விவாதித்தனர். அந்த இரவில் சண்டை ஆரம்பமானது. இந்திய இராணுவம் இங்கு அழைக்கப்பட்டதும் அவ்வாறே. இது என்னுடைய தனிப்பட்ட முடிவு. இதற்கு நான் பொறுப்பேற்கிறேன். மேலும் இதை நான் செய்திருக்காவிட்டால் புலிகள் இப்போரில் வென்றிருப்பார்கள். நான் சொல்லக்கூடிய விஷயங்கள் இவ்வளவுதான்.'

இந்திய இலங்கை உடன்பாடு ஏற்படுவதற்கான நிலை பற்றியும் இந்திய அமைதிப்படை அழைக்கப்பட்டதற்கான காரணத்தையும் அவ்வாறு இந்திய அமைதிப்படை அழைக்கப் பட்டிருக்காவிட்டால் புலிகளிடம் இலங்கை இராணுவம் தோற்று போயிருக்கும் என்று அதிபர் செயவர்த்தனே அவர்களே ஃபிரண்ட்லைன் ஆகஸ்ட் 31, செப்டம்பர் 13, 1991 இதழில் அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

இலங்கை பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தின் போது காமினி திசநாயகா, இந்திய இராணுவம் அழைக்கப்பட்டிருக்காவிடில் புலிகள் மத்திய இலங்கை வரை வென்றிருக்கப் போவதை யாரும் தடுத்திருக்க முடியாது என்று கூறினார்.

இப்போது விடுதலைப்புலிகளின் போர்த்திறன் உலகுக்கு தெரிந்து விட்டது.

ஆனால் கொஞ்சமும் கூசாமல் பொய்களை எழுதுவதில் சிறந்தவர் துக்ளக் சோ என்பது தெரிகிறது.



**"பாராளுமன்ற தேர்தலில் பெருவாரியான வெற்றி களைப் பெற்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினருக்கு ஓர் இடம்தான் கொடுக்க வேண்டும் என்றார் பிரபாகரன்"–துக்ளக்.**

எப்போதுமே தமிழனத்துக்கும் தமிழ்மொழிக்கும் எதிராகவும் பேசியும் எழுதியும் வரும் துக்ளக் சோ, திடீரென்று நடுநிலை வேடம் போடுவது போல் அமிர்தலிங்கத்தின் தமிழர் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாகப் பேசுகிறார். இதுவும் தமிழர் நலனுக்காக அல்ல. புலிகளை எதிர்க்க வேண்டும் என்பதற்காகத்தான்.

இந்திய இலங்கை உடன்பாடு ஏற்பட்டபோது விடுதலைப் புலிகள் மற்றும் விடுதலைப்புலிகள் ஆதரவு இயக்கமாக செயல்பட்ட ஈரோஸ் அமைப்பைத் தவிர மற்ற தமிழ் அமைப்புகள் ஏற்றுக் கொண்டன என்றார் சோ. இடைக்கால ஆலோசனைக் கவுன்சில் அமைச்சரவையில் 1977 பாராளுமன்ற தேர்தலில் பெருவாரியான இடங்களில் வெற்றிப் பெற்ற அமிர்தலிங்கம் தலைமையிலான விடுதலை முன்னணியினருக்கு ஓர் இடம் தான் தர வேண்டும் என்றார் பிரபாகரன் என்று குற்றம் சாட்டிய சோ, அவரது கணிப்புகளும் பொய்களும் இந்திய அமைதிப்படையால் துப்பாக்கி முனையில் நடத்தப்பட்ட தேர்தலில் அம்பலப்பட்டு போனது. 1.3.89 துக்ளக் இதழ் கேள்வி பதில் ஒன்றில், 'ஓட்டளிக்கக் கூடாது' என்ற விடுதலைப்புலிகள் மிரட்டியும், ஓட்டளிக்க மக்கள் முன் வந்தனர் என்பது ஒரு நல்ல அறிகுறி. ஈராஸ் அமைப்புக்கு நல்ல வெற்றி கிட்டியிருப்பதும், அமிர்தலிங்கம் கட்சிக்குப் படுதோல்வி கிட்டியிருப்பதும்–துன்ப காலத்தில் உழைத்தவர்களிடம் அம்மக்களுக்கு மரியாதை ஏற்பட்டிருப்பதற்குச் சான்று. ....இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்ற ஈராஸ், ஈ.பி.ஆர்.எல். எஃப். குழுக்களின் வெற்றிகளும்–இந்திய அரசின் இலங்கை முயற்சிக்குக் கிடைத்துள்ள நற்சான்றிதழ்கள்' என்று சோ கூறியுள்ளார்.

**இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு சம்மதிக்காத விடுதலைப் புலிகளும் ஈராஸ் அமைப்பும்** என்று 1.11.87 துக்ளக் இதழில் எழுதிய

சோ 1.3.89 இதழில் **இந்திய இலங்கை உடன்பாட்டை ஏற்ற ஈராஸ் அமைப்பு** என்று மாற்றியும், அமிர்தலிங்கத்திற்கு ஒரு இடம்தான் தருவதற்கு பிரபாகரன் சம்மதித்தார் என்று பிரபாகரன் மீது குற்றம் சாட்டிய சோ, இந்த பதிலில் துன்ப காலங்களில் உழைத் தவர்களிடம் அம்மக்களுக்கு மரியாதை ஏற்பட்டிருப்பதற்குச் சான்று என்றும் முன்னுக்குப்பின் முரணாகக் கூறியுள்ளார்.

45 ஆயிரம் இந்திய இராணுவ வீரர்கள் இருந்தும் யாழ்ப் பாணத்தில் 20 விழுக்காடு மக்களே வாக்களித்தனர். வெற்றிப் பெற்ற ஈராஸ் வேட்பாளர்களும் விடுதலைப் புலிகளின் பெயர் களைச் சொல்லி ஓட்டுக் கேட்டனர். ஆலோசனைக் கவுன்சில் அமைச்சரவையில் அமிர்தலிங்கத்தின் கட்சியினருக்கு ஓர் இடம் தான் அளிக்க வேண்டும் என்று பிரபாகரன் கூறியதைக் குறை கூறிய சோ, இந்த தேர்தலில் அவர்கள் படுதோல்வி அடைந்ததும், தனது பொய்க் கூற்றை மறைக்க, துன்ப காலங்களில் உழைத்தவர் களுக்கு அம்மக்கள் மரியாதை செலுத்தியுள்ளனர் என்று எழுதினார். இதுதான் சோவின் பூணூல் தர்மம்.

மேலும், 1977 சூலை 21 ஆம் தேதி நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் பெற்ற வெற்றியின் பின்னணி இதோ...

1976 இல் நடைபெற்ற காங்கேசன்துறை இடைத்தேர்தலில் தந்தை செல்வா தனித் தமிழ் ஈழக் கோரிக்கை முன் வைத்துப் பிரச்சாரம் செய்தார். அந்தத் தேர்தலில் அவருக்கு மிகப்பெரிய வெற்றிக் கிடைத்தது.

இதன் பின் பாராளுமன்றத்தில் 19.11.76 இல், தந்தை செல்வா அவர்கள், "ஒரு காலத்தில் தமிழர்கள் புத்திசாலித்தனமாக, விவேக முள்ளவர்களாக, தனி அரசுடனேயே வாழ்ந்து வந்தனர். இலங்கையின் வரலாற்றில் தமிழருக்கு உரிய இடம் இருந்தது. நமது



இயக்கம் உண்மையில் ஒரு தேசத்தைத் துண்டாடும் இயக்கம் என்று கருத நியாயம் இல்லை. **தமிழ் ஈழம் ஏற்பட வேண்டும் என்பது இழந்ததை மீட்கும் இயக்கமாகும்**. இப்போது (1976 இல்) நமது இயக்கமானது தமிழர்களுக்கு ஒரு தனிராஜ்யம் வேண்டும் என்ற குறிக்கோளுடன் நடப்பதாகும். ஆனால் நாம் சிங்கள மக்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டாலொழிய நாம் அழிந்து விடுவோம் என்பது நிச்சயம். ஆகையால் நாம் முயற்சி எடுத்து இந்தப் பிரிவினையை அடைந்தேயாக வேண்டும். சமசுடி அரசு ஏற்பட வேண்டும் என்ற கோரிக்கையை கை கழுவி விட்டோம்" என்று உரையாற்றினார்.

தமிழர் கூட்டணித் தலைவர்களாக திரு. செல்வநாயகம், திரு.பொன்னம்பலம், திரு. தொண்டமான் ஆகியோர் இருந்தனர். இவர்கள் 1977 மே மாதம் 14 ஆம் தேதி வட்டுக் கோட்டையில் கூடி தீர்மானம் போட்டனர். அதற்கு **வட்டுக்கோட்டை தீர்மானம்** என்றே பெயர்.

அதில் 'தமிழீழக் குடியரசு' என்ற தீர்மானத்தில், 'ஒவ்வொரு நாட்டிற்கும் உள்ள சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான இறைமையுள்ள மத சார்பற்ற சோசலிச தமிழீழத்தை அமைப்பதற்கு நாம் எம்மை அர்ப்பணிப்போம். இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு அதுவே பாதுகாப்பாக அமையும்'.

'தமிழீழ நிலப்பரப்பு' என்ற மற்றொரு தீர்மானத்தில், 'தமிழீழத்தின் நிலப்பரப்பாக வடக்கு, கிழக்கு மகாணமும், புத்தள மாவட்டமும் இருக்கும்.'

'தமிழீழ அரசை அமைக்கும் போது சிங்கள இராணுவ அரசியல் அழுத்தங்களிலிருந்து விடுபட்டு, எதிர்க்க தமிழர் கூட்டணியானது, தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி என்று மாநாட்டில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது'.

இந்நிலையில் அந்த தேர்தல் அறிவிக்கப்பட்டபோது, தமிழர் தலைவர்களான செல்வநாயகம், பொன்னம்பலம் ஆகியோர் இறந்தார்கள். இந்நிலையில்தான் திரு. அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக வந்தார்.

தேர்தலில் வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு பொது மக்களிடம் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அங்கீகாரம் கேட்டனர். இதற்கு தமிழீழ மக்களும் ஆதரவு அளித்தனர். இதனால் வடக்கு, கிழக்கு மகாணங்களில் 18 தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

ஆனால் சுதந்தர தமிழீழத்திற்கான அரசசபை ஒன்றினை அமைப்பதற்குப் பதிலாக, திரு. அமிர்தலிங்கம் தலைமையிலான விடுதலைக் கூட்டணியினர் ஸ்ரீலங்கா தேசிய பேரவைக்குச் சென்று எதிர்க் கட்சித் தலைவர் பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டனர். மேலும் அத்தேர்தலில் வெற்றிப் பெற்று பிரதமரான செயவர்த்தனே மூலம் வழங்கப்பட்ட பிரதேச சபை அமைப்பை ஏற்றுக் கொண்டனர்.

இது மட்டுமல்ல. திரு. அமிர்தலிங்கம் அவர்கள் ஈழ மக்களிடையே செல்ல முடியாமல் சிங்கள அரசால் அளிக்கப்பட்ட தேசிய பட்டியல் மூலம் எம்.பி. ஆகவும் இருந்து கொழும்பில் வாழ்ந்தார்.

முடிவாக, இவர்களின் (துக்ளக், தினமணி) நிறத்தை அடையாளம் காட்டவே இவைகளை எழுதினேன். இவர்கள் வேரோடு அறுக்கப்பட வேண்டும்.



**இணைப்பு – 1**

## ஈழப்போராட்டத்தில் பார்ப்பனர்களின் துரோகம்

தமிழீழ விடுதலை எழுச்சிக் கொண்டிருந்தவேளையில் தாய்த் தமிழகத்தில் எழுந்த தமிழ்த்தேசிய எழுச்சியினைக் கண்டு, அதுவரை ஈழப் பிரச்சனையைக் கண்டும் காணாததுமாக இருந்த பார்ப்பன ஏடுகள் ஈழ விடுதலையை எதிர்த்து எழுதத் தொடங்கினர். விடுதலைப் புலிகளையும் ஈழப் போராட்டத்தைப் பற்றியுமே எழுதி, புகைப் படங்களையும் வெளியிட்டு வியாபாரம் செய்து வந்த ஃப்ரண்டலைன் இதழ், அதன் ஆசிரியர் என். இராம் போன்றவர்கள் தங்களின் குணங்களை வெளிக்காட்ட தொடங் கினர். துக்ளக் சோவும், தினமணி, தினமலர் போன்ற பார்ப்பன ஏடுகளும் இதில் ஈடுபட்டன. இந்தியன் எக்ஸ்பிரஸ் குருமூர்த்தி, துக்ளக் சோ, இந்தியா டுடே வாசந்தி, சுப்ரமணியசாமி போன்ற பார்ப்பனர்களும் வக்கிரப்புத்தியுடன் இந்த அவதூறுப் பிரச்சாரத் தில் ஈடுபட்டனர்.

நடுநிலை ஏடுகள் என்று கூறிக்கொண்டு துக்ளக்கும், தினமணியும் 1987 இல் ஏற்பட்ட இந்திய இலங்கை உடன்பாட்டி லிருந்து இன்று வரை ஈழப்போராட்டத்தை எதிர்த்து வன்மை யாகவும் பொய்யாகவும் செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

**துக்ளக் சோ:**

16.9.98 துக்ளக் இதழில், '1970–களில், நான் இலங்கை சென்ற போது, அப்போது தீவிரவாதம் பெரிதாகத் தலைதூக்கவில்லை. ஆனால் பிரிவினை வாதம் வளர்ந்து கொண்டிருந்தது. அந்தச் சூழ்நிலையில் அங்கு சென்ற நான் வக்கீல்கள் சங்கத்தினரிடையே பேசினேன். 'இங்கு வளர்ந்துவரும் பிரிவினைவாதத்தை இந்தியா ஆதரிக்கக்கூடாது என்பது என் கருத்து. இலங்கைத் தமிழர்களாகிய

நீங்களும் பிரிவினைவாதத்தைக் கைவிட்டு இங்கே இந்தியா போன்ற சமசுடி அமைப்பு உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பிரிவினை வாதத்தை ஊக்குவிப்பதால் உங்களுக்கு ஒரு பயனும் கிட்டப்போவதில்லை' என்று பேசியதாக எழுதியுள்ளார் சோ.

1970–களில் என்ன நடந்தது என்பதை முன்பு விளக்கமாக எழுதியுள்ளேன். இந்த வரலாறுகூட தெரியாமல் வக்கிரப்புத்தியுடன் பேசியுள்ளார் சோ.

மொரார்ஜி தேசாயும் செயவர்த்தனாவும் நெருங்கிய நண்பர்கள். இந்தியாவின் பிரதமரான மொரார்ஜி தேசாய், செயவர்த்தனாவுக்கு ஆதரவாக, இங்கிருந்து குடியேறிய தமிழர்கள் இலங்கையில் அந்நாட்டில் அமைதியாக இருக்க வேண்டும் என்று பேசினார். இலங்கைக்கு ஆதரவாகச் செயல்பட்டவர் மொரார்ஜி. அப்படிப் பட்ட மொரார்ஜி தேசாயிடம், ஈழத்தமிழர் பிரச்சனைக் குறித்து பேசுமாறு அமிர்தலிங்கம் தன்னிடம் கேட்டுக் கொண்டதாக சோ எழுதுகின்றார். அமிர்தலிங்கத்தின் யோசனைப்படி மொரார்ஜியிடம் சோ பேசிய போது, மொரர்ஜி, 'இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவில் இருப்பது போல் சமசுடி உரிமையை கொடுக்க வேண்டும் என்று செயவர்த்தனவைச் சந்தித்துக் கேட்கிறேன். அவர் இதற்குச் சம்மதிக்கவில்லை என்றால் இலங்கை ஜனாதிபதியின் மாளிகைக்கு முன்பு சாகும் வரை உண்ணா விரதம் மேற்கொள்கிறேன் என்றார் மொரார்ஜி' என்று சரடு விட்டார் சோ. (துக்ளக் இதழ் 16.9.98)

சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்வதற்கு இரண்டு நிபந்தனைகளை அமிர்தலிங்கம் நிறைவேற்ற வேண்டும் என்றார் மொரார்ஜி. அவற்றில்,

1. வன்முறையை தான் முழுமையாக எதிர்ப்பதாகவும் 2.தமிழர்களுக்கு ஒரு சுதந்திர நாடு அமைய வேண்டும் என்ற



கோரிக்கையை கைவிடுவதாகவும் அமிர்தலிங்கம் அறிக்கை வெளியிட வேண்டும் என்றார். (துக்ளக் இதழ் 23.9.98)

இதை ஏற்றால் ஈழத்தமிழர்கள் தங்கள் இயக்கத்தை என்ன செய்வார்கள் என்பது அமிர்தலிங்கத்துக்குத் தெரியும். ஈழத் தமிழர்களுக்குப் பல துரோகங்களை செய்த ஃபெடரல் கட்சினர் (திருச்செல்வமும் அமிர்தலிங்கமும் தந்தை செல்வாவை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு) தமது மக்களின் நிர்ப்பந்தத்தினாலேயே 1976 இல் **தமிழ் ஈழமே தீர்வு** என்ற முடிவுக்கு வந்தனர். எனவே மொரார்ஜி நிபந்தனைகளை அமிர்தலிங்கம் ஏற்க வில்லை. அத்துடன் இந்த முயற்சி முடிவடைந்ததாக சோ எழுதுகிறார். சோவும், மொரார்ஜியும் அமிர்தலிங்கமும் எப்படிப் பட்ட தமிழின எதிரிகள் என்பது இதிலிருந்து விளங்கும்.

அமிர்தலிங்கம் கொலையுண்டால் விடுதலைப் புலிகளைக் கண்டிப்பார். நீலன் திருச்செல்வம் கொலையுண்டால் புலிகளைப் பற்றி அவதூறுச் சொல்லுவார் சோ. ஆனால் இந்திய இராணுவம், தூதராக சென்ற ஜானி என்ற விடுதலைப் புலித் தளபதியைக் கொன்ற போது வாய் திறக்க மாட்டார். திலிபன் மரணத்துடன் விளையாடியது தீட்சித்தும் இந்திய அரசும். திலிபன் மரணம் பற்றி சோ, வாய் திறக்கவில்லை.

400 ஈழத்தமிழர்கள் உயிரோடு செம்மணியில் புதைக்கப் பட்ட போது, ஜெனிவாவில் உள்ள மனித உரிமைக்கழகம் ஆவேசமாகக் குரல் கொடுத்து, நடந்த கொடுமைகளைக் கண்டறிய நடவடிக்கை எடுத்த போது, சோ ஒரு வரிக்கூட இது குறித்து துக்ளக்கில் எழுத வில்லை.

1997 ஆம் ஆண்டு சோனேசுவரி என்ற பெண் கற்பழித்துக் கொலை செய்யப்பட்டார். இலங்கையின் **சண்டே டைம்ஸ்,** 'இதை செய்தது இலங்கை இராணுவம் என்பதை ஒப்புக் கொண்டது'. அந்தப் பெண்ணின் பிறப்புறுப்பில் கையெறிக் குண்டு வைத்துக்

கொல்லப்பட்டார் என்று The British Refuge Council Sri Lanka Moniter எழுதுகிறது. இதைப்பற்றி சோ கவலைக் கொள்ளவில்லை. இது அவருக்கு வன்முறையாகத் தெரியவில்லை.

